மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 19 ஞாயிற்றுக்கிழமை (02.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 97

# இராணுவ நகர்வை நியாயப்படுத்தவே அரசின் 13ஆவது திருத்த அமுல் முயற்சி

## கிழக்கில் சுமுக நிலை குறுகிய காலத்தில் சாத்தியமில்லை என்கிறார் ரவூப் ஹக்கீம்

கொழும்பு, மார்ச்2



அரசாங்கம் இனப்பிரச்சினைக்குக் காத்திரமான அரசியல் தீர்வொன்றை நோக்கிச் செல்லும் என்பதில் எனக்குத் துளியும் நம்பிக்கை இல்லை.

தனது இராணுவ நகர்வை நியாயப்படுத்துவதற்காகவே 13ஆவது திருத்தத்தை அமுல் செய்யப்போவதாக அரசு கூறுகிறது. இதனை ஒரு தற்காலிக முயற்சியாகவே நாம் நோக்குகின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் சுமுகநிலை குறுகிய காலத்தில் சாத்தியமே இல்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது நீண்ட செவ்வியின் சில பகுதிகள் வருமாறு-

அனைத்துக் கட்சிக் குழுவின் பரிந்துரைகளின் இறுதி அறிக்கை தயாரிப்பதற்கு அதன் தலைவர் முயற்சிகள் மேற்கொண்டிருந்தபோது, அதற்குள் 13ஆவது திருத்தத்தை நுழைத்து அனைத்துக் கட்சிக் குழுவினரை அதனை ஆமோதிக்குமாறு மஹிந்த கேட்டுக்கொண்டார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளுக்கு வழங்கும் ஆதரவை நிறுத்தி அரசின் தீர்வு முயற்சிக்கு ஒத்துழைப்புத் தாருங்கள்

### அயர்லாந்தின் ஜெரி அடம்ஸிடம் இலங்கை அரச குழு நேரில் வேண்டுகோள்



லண்டன்,மார்ச்2

தமிழீழ விடுதலைப் புலிகளின் தனி நாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்க வேண்டாம். தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் பொருட்டு அரசாங்கம் அரசமைப்புச் சட்டத்தில் 13 ஆவது திருத்தத்தின் கீழ் தீர்வு ஒன்றை விரைவில் வழங்கவுள்ளது.

வட அயர்லாந்தின் சின்பெயின் அமைப்பின் தலைவர் ஜெரி அடம்ஸை நேரில் சந்தித்த இலங்கை அரசாங்கத் தூதுக் குழு மேற்கண்டவாறு கேட்டுள்ளது. இக்குழு நேற்று வட அயர்லாந்துக்கு விஜயம் செய்தது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்குவதை நிறுத்துவதோடு அவர்களுடனான தொடர்புகளையும் நிறுத்தவேண்டும் என்றும் அரசாங்கத் தூதுக்குழு அடம்ஸிடம் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா, சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார, பிரதிநிதி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.மஹ்ரூப் ஆகியோர் கொண்ட குழு பிரிட்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது. அந்தக் குழுவே நேற்று வட அயர்லாந்து சென்று ஜெரி அடம்ஸைச் சந்தித்தது.



விடுதலைப் புலிகள் அமைப்புப் பயங்கரவாத அமைப்பு. (14ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை, மன்னாரில் பொறிவெடிகளில் சிக்கி 4 படையினர் பலி

அம்பாறை,மார்ச்2

அம்பாறை கஞ்சிகுடிச்சாறில் விடுதலைப் புலிகளின் பொறிவெடிகளில் சிக்கி மூன்று சிறப்பு அதிரடிப்படையினர் நேற்றுக் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை அங்கு தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்ட படையினரே

(14ஆம் பக்கம் பார்க்க)

## 41.7 பில்லியன் ரூபாவுக்கு புதிய பணநோட்டுக்கள்!

கொழும்பு,மார்ச்2

இலங்கை மத்திய வங்கி நடப்பு நிதியாண்டில் 41.7 பில்லியன் ரூபா பெறுமதியான புதிய பணநோட்டுக்களை அச்சடித்துப் புழக்கத்தில் விடுவதற்கு உத்தேசித்துள்ளதாகத் தெரியவருகிறது. கடந்தநிதியாண்டில் இலங்கை மத்திய வங்கி 27.7 பில்லியன் ரூபா பெறுமதியான புதிய பண

(14ஆம் பக்கம் பார்க்க)

## பூவரசம்குளம் கிளைமோரில் 2 பொலிஸார் பலி!

வவுனியா,மார்ச்2

வவுனியா, பூவரசம் குளத்தில் நேற்று சனிக்கிழமை காலை நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் பொலிஸார் இருவர் பலியாகினர்.

வீதிச் சுற்றுக் காவலில் ஈடுபட்டிருந்த பொலிஸாரே நேற்று முற்பகல் 10.40 மணியளவில் கிளைமோர் தாக்குதலுக்கு ஆளாகினர்.

கொல்லப்பட்ட பொலிஸார் இருவரினதும் சடலங்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன. (அ-1)

## முகத்துவாரம் குண்டு வெடிப்பு: காயமுற்ற பொலிஸ் மரணம்

கொழும்பு,மார்ச்2

முகத்துவாரப்பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற குண்டு வெடிப் சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி நேற்று மரணமானார்.

அந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் பொலிஸார் தேடுதல் மேற்கொண்ட வேளை அங்கு குண்டு ஒன்று வெடித்தது தெரிந்ததே.

சம்பவத்தில் காயமடைந்த மூன்று பொலிஸார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

அவர்களில் ஒருவரே நேற்று மரணமானார் என்று கொழும்பு ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

## பண்டிவிரிச்சானில் கடும் மோதல்

கிளிநொச்சி,மார்ச்2

மன்னார் பண்டிவிரிச்சான் பகுதியில் நேற்றுக்காலை 5 மணிமுதல் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

படையினர் பண்டிவிரிச்சான் பகுதியில் கைப்பற்றிய நிலைகளை மீளக்கைப்பற்றுவதற்காக விடுதலைப் புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர். அதனை அடுத்து மோதல் வெடித்ததாகவும் மோதல் சுமார்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணசபைத் தேர்தலை மே மாதம் நடத்த அரசு திட்டம்

கொழும்பு,மார்ச்2

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர்வரும் மே மாதத்தில் நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. அதற்கு முன்னோடியாக, அனேகமாக இம்மாதம் 23ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசின் மூத்த அமைச்சர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார் என்று கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே
### சொற்சிலம்பம்

உங்கள் பொது அறிவு, தமிழ் மொழி அறிவு, விவேகம் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள உதவும் சொற்சிலம்பம் உதயனின் ஞாயிறு இதழ்களில் இவ்வாரம் தொடக்கம் வெளிவரும்.

பலராலும் விரும்பப்படும் இந்த அம்சம் உங்கள் விவேகத்தைப் பட்டை தீட்டிக் கொள்ளும் ஒரு பொழுது போக்கு அம்சமுமாகும் என்பதனை நீங்கள் அறிவீர்கள்

வாசகர்கள் பலரின் வேண்டுகோளுக்கு இணங்க சொற்சிலம்பம் பகுதி ஆரம்பிக்கப்படுகிறது.

விவரங்களுக்கு 9ஆம் பக்கத்தைப் புரட்டுங்கள்.






மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏசியன் உள்நாட்டு வெளிநாட்டுக்கான பொதிகள் சேவை

வெளிநாட்டுக்கான பொதிகள், ஆவணங்கள் 3 நாள்களுக்குள் உத்தரவாதத்துடன் அனுப்பிவைக்கப்படும்.
மற்றும் கொழும்பு - யாழ்., யாழ். - கொழும்பு பொதிகள் ஆவணங்கள் உடனுக்குடன் அனுப்பிவைக்கப்படும்.
உங்களுக்குத் தேவையான வீட்டுத் தளபாடங்கள், அலுவலகத் தளபாடங்கள், மெத்தை வகைகள் பெற்றுக்கொள்ளலாம்.

**Asian தளபாட நிலையம்,**
133,மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலையத்துக்கு அருகில்) யாழ்ப்பாணம்.
(சி/551667) தொடர்புகளுக்கு - 0715635028


## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் - இலங்கை

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு தொடர் நிகழ்வு இன்று (02.03.2008) ஞாயிறு பிற்பகல் 1.30 மணியளவில் மேற்படி ஒன்றியத்தில் நடைபெறும்.

*தலைமையுரை* : து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் (மட்டுவில்)
*விடயம்* : விசேஷ சந்தி
*கருத்துரை* : பிரம்மஸ்ரீ ச.சண்முகானந்தக் குருக்கள் (மயிலணி)

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி (71607) சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம்.

## மரண அறிவித்தல்கள்

### மகேஸ்வரி சுப்பிரமணியம்

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் கோவளம், மெலிஞ்சி யோடையை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மகேஸ்வரி நேற்று (01.03.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கொட்டாஞ்சேனை வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மனைவியும் இராசம்மா, அன்னபாக்கியம்,நல்லம்மா, கணபதிப்பிள்ளை, இராசேந்திரம் ஆகியோரின் சகோதரியும், கந்தையா, காலஞ்சென்ற நல்லம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03..2008) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இல.01, சீனியர் லேன்,யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இல 01, சீனியர் லேன், யாழ்ப்பாணம். வே.கணபதிப்பிள்ளை (களபூமி றைஸ் மில்)

### திருமதி இரத்தினம் அன்னலட்சுமி (மணி)

சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் தற்போது 30, வற்றப்பொல வீதி, கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி நேற்று (01.03.2008) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - வள்ளியம்மையின் (வடலியடைப்பு) மகளும், காலஞ்சென்ற இளையதம்பி - அன்னமுத்து ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்ற இரத்தினத்தின் (இளைப்பாறிய பொலிஸ் சார்ஜண்ட்) மனைவியும், தவமணிதேவி (கொழும்பு), ரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஆறுமுகம் அவர்களின் அன்பு மாமியும், காலஞ்சென்ற கணேசன் மற்றும் யோகரட்ணம் (முன்னாள் ஊழியர், இ.போ.ச.) ஆகியோரின் சகோதரியும் தர்சனன், சுதர்சனன், நிதர்சனன் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மஹிந்த மலர்ச் சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2008) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற்றுத் தகனக் கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
18/1, காட்டுக் கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி. (71614) க.யோகரட்ணம் (செல்வம்)


## CAR FOR SALE

WP JN 9955 Nissan Bluebird Sylphy
F/O, P/S, P/M, Video CD/TV, Sat Navi
Contact : 0212227661


## தவறிவிட்டது

இல.31, சென்.பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய கரோலின் சொபியா யேசுதாசன் என்பவருடைய தே. அ. அ. (886333480V) பற்றிக்ஸ் வீதி, பிரதான வீதிக்கும் யாழ். பஸ் நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும்.


## Canon 2016J



போட்டோக் கொப்பி இயந்திரங்கள் (புதியது) விற்பனைக்கு உண்டு. கவர்ச்சிகரமான விலையில பெற்றுக் கொள்ளலாம்.

**தாரங்கி**
137, பலாலி வீதி,
(தபால் பெட்டிச் சந்தி)
திருநெல்வேலி.



## A/L Day Class 2008

SUBRA (14) Sithankerney

**புதிய பிரிவு - 03.03.2008 திங்கள் காலை-6.30**

| | | |
|---|---|---|
| Tam. | - குழந்தை | Tue, Fri 2.00-4.00 |
| Log. | - E.S.பவன் | Mon, Wed 7.00-8.00 |
| Dra. | - சுவேஸ் | Mon, Wed 6.30-8.00 |
| | | Wed, Fri 3.00-4.00 |
| Hincul. | - சந்திரன் | Thu, Fri 6.30-8.30 |
| Geo. | - ஜங்கரன் | Mon,Wed, Fri 4.00-6.00 |
| P.Sc. | - அசோக் | Tue, Thu 4.00-6.00 |
| His. | - குமார் | Sat, Sun 10.00-12.00 |
| Eco. | - சிறி | Sat, Sun,Fri 1.00-3.00 |
| B.St. | - நந்தீஸ் | Sat, Sun 4.00-6.00 |
| A.cc. | - சுபேசன் | Sat, Sun 8.00-9.00 |
| | சீலன் | Mon, Wed,Fri 4.30-6.00 |
| C.maths | - குணம் | Thu, Fri 4.00-6.00 |
| Phy. | - சண் | Mon,Wed,Fri 6.15-8.00 |
| Che. | - கண்ணதாசன் | Tue, Thu 6.30,8.00 |
| Bio. | - கஜன் | Sat, Sun 2.00-3.00 |
| | சுரேன் | Sat, Sun 3:30-5.00 |

(71610)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியரும் பகுதித் தலைவருமான திருமதி ரஞ்சினி சிவராஜா அவர்களது பாசமிகு மாமியார்

**திருமதி சின்னத்துரை பொன்னம்மா**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததமையை யிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களது துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நவரட்ணம் அன்னம்மா



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும்,இல.86, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நவரட்ணம் அன்னம்மா நேற்று(01.03.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணத்தின் அன்பு மனைவியும் சிவபாக்கியம், கந்தசாமி, சிவக்கொழுந்து, தங்கலட்சுமி ஆகியோரின் சகோதரியும் தேவராணி, தேவநாதன், தேவகி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் தேவராசாவின்(இளைப்பாறிய ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி) சிறிய தாயும் பிரேமச்சந்திரன் (அலங்கார ஆடையகம், நவீன சந்தை, யாழ்ப்பாணம்), ஞானஜோதி, ஸ்ரீரஞ்சன்(ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் யதுசன், கிரிசாந்தன், பிரியகீதன்(மாணவன், சென் ஜோன்ஸ் கல்லூரி), சஸ்மி (ஜேர்மனி), ஐஸ்னன்(ஜேர்மனி), பகீரதன், பரணிதரன், பிரியதர்சினி, காலஞ்சென்ற பகீரதி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.03.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இல.86, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (71615) ந.தேவநாதன் (மகன்).

### திருமதி பரமேஸ்வரி பொன்னுத்துரை



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், அல்வின் வீதி, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பொன்னுத்துரை 29.02.2008 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசா - பாலாமணி தம்பதியரின் மூத்த புதல்வியும் சிறிஸ்கந்தராசா (சிறி - பிரதேச சபை, ஊர்காவற்றுறை), சிறிகுலராசா (பேபி - புடைவை வியாபாரம், நவீன சந்தை முன்பாக, யாழ்ப்பாணம்), சிறிகுலராணி ஆகியோரின் அன்புத் தாயும் சிவகுருநாதன் (இ.போ.ச., காரைநகர்), நாகேஸ்வரி, கௌசல்யாதேவி ஆகியோரின் அன்பு மாமியும் ரங்கேஸ்வரன், அங்கேஸ்வரன், ஜெகதீஸ்வரன், சதீஸ்வரன், கோணேஸ்வரன், கஜந், பவந், தாரகி, சனுசா, நிசன், பதுசனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் தம்பிஜயா, தனபாக்கியம், சின்னக்கிளி (பிரான்ஸ்), சற்குணம் (புத்தளம்), சின்னதங்கச்சி (லண்டன்), காலஞ்சென்ற மகாலிங்கம், நிர்மலாதேவி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.03.2008) ஞாயிற்றுக்கிழமை சுன்னாகத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஜெட்மோட்டோர்ஸ் முன்பாக, முதலியார் வளவு, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். (சி/551664) தகவல்: குடும்பத்தினர்.

### ஏரம்பு செல்லம்மா



மண்கும்பான் 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 17/27, பண்டாரக்குளம் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு செல்லம்மா நேற்று (01.03.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமுப்பிள்ளை - அம்முப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற துரைராசா (G.S), இந்திரபூபதி (சுவிஸ்), தெட்சணாமூர்த்தி, சாம்புணதீஸ்வரி, செல்வராணி ஆகியோரின்அன்பு தாயும் காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் பரமேஸ்வரி, இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், கற்பகம், அன்னம்மா மற்றும் அருளம்பலம் ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளையின் மைத்துனியும், அரசரத்தினம் (ஜேர்மனி), எழில்மதி, சுபாசினி (சுவிஸ்), உதயசங்கர் (பிரான்ஸ்), விஜயசங்கர், லாவண்யா (கொழும்பு), சத்தியசங்கர் (கொழும்பு), அனுசியா (கொழும்பு), துவாரகா, யதுர்சன் ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02. 03.2008) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.30 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நல்லூர். (71606) குடும்பத்தினர்.

### தங்கவேல் தெய்வானைப்பிள்ளை

வத்திராயன் தெற்கு, தாளையடியைச் சேர்ந்த திருமதி தங்கவேல் தெய்வானைப்பிள்ளை நேற்றுமுன்தினம் 29ஆம் திகதி கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கவேலின் அன்பு மனவியும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சசிதேவி, சுரேஸ்குமார் (பருத்தித்துறைப் பிரதேச சபை) ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்கிசையிலுள்ள தற்காலிக வதிவிடத்தில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடத்தனை மேற்கு, குடத்தனை (சி/551666) சுரேஸ்குமார் (பெறாமகன்)

## மரண அறிவித்தல்

### அதிரியான்பிள்ளை இறப்பியேல்பிள்ளை

**(ஓய்வுபெற்ற துறைமுக இயந்திர இயக்குநர் (கிறேன் ஒப்பறேற்றர்))**



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அதிரியான்பிள்ளை இறப்பியேல் பிள்ளை 29.02.2008 வெள்ளிக்கிழமை 5.30 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அதிரியான்பிள்ளை - அலங்காரம் தம்பதியரின் அன்பு மகனும் பிலோமினாவின் அன்புக் கணவரும், மேரி, மரியம்மா, காலஞ்சென்ற இராசப்பூ ஆகியோரின் பாசமிகு சகோதரரும் மேரிஅல்போன்சா, தேவராசா(ஜேர்மனி), ஞானஉதயதாசன் (ஜேர்மனி), குருஸ்ரபாயல், மேரிசிலோறினா, இருதயராஜ்(ரவி - லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், எட்மன் சப்சிங், சுமித்திரா(ஜேர்மனி), சகாயராணி(ஜேர்மனி), அன்ரனி டொறின்ரன், மேரி சியாமளா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் திருமதி ரவிக்குமார் சுதர்சனா, சஜீவன், சுலெக்சன், வினோத், கனிஸ்ரன், கமில்ரன், அஜித், ரபீனா(லண்டன்), றொசானா (லண்டன்), நிருபா (ஜேர்மனி), நிருஷன்(ஜேர்மனி), நிக்கொலின்(ஜேர்மனி), றொபின் (லண்டன்), ஆகியோரின் அன்புப் பேரனும் மலர், புஸ்பம், லூர்த்தையா, ஆசைப்பிள்ளை (நியூஸிலாந்து), ரஞ்சிதம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல், நல்லடக்க ஆராதனைக்காக இன்று (02.03.2008) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் மு.ப 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் ஆனைக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உயரப்புலம், ஆனைக்கோட்டை மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### சண்டிலிப்பாய் கோட்ட மெய்வன்மைப் போட்டிகள்

சண்டிலிப்பாய் கோட்ட மட்ட மெய்வன்மைப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

மேற்படி போட்டிகள் கடந்த 29ஆம் திகதி ஆரம்பிக்கப் படவிருந்தன. எனினும் சீரற்ற காலநிலை காரணமாக இப்போட்டிகள் நாளையே ஆரம்பமாகின்றன.

புதிய ஒழுங்கின்படி கடந்த 29ஆம் திகதி நடைபெறவிருந்த போட்டிகள் எதிர்வரும் 6ஆம் திகதியும் நேற்று நடைபெறவிருந்த போட்டிகள் எதிர்வரும் 8ஆம் திகதியும் இன்று நடைபெறவிருந்த போட்டிகள் திட்டமிட்டபடியும் இடம்பெறும் என்று போட்டிச் செயலகம் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கின் சனத்தொகை 20 வருடங்களில் 5.2% குறைந்தது
# குடிசனக் குறைவு யாழ். மாவட்டத்திலேயே மிக அதிகம்

இலங்கை ஒன்பது மாகாணங்களாகவும், இருபத்தைந்து மாவட்டங்களாகவும் நிர்வாக ரீதியில் பிரிக்கப்பட்டுள்ளது. 1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய உடன்படிக்கையின் படி வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் தற்காலிகமாக இணைக்கப்பட்டு, இன்று மீண்டும் இரு நிர்வாகப் பகுதியாக மாற்றப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 28.3% நிலப்பரப்பையும், 11% மக்களையும் கொண்டுள்ளன. இன்று இம் மாகாணங்கள் 8 மாவட்டங்களாகவும், 78 பிரதேச செயலகங்களாகவும், 1998 கிராம அதிகாரி பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டம் பரப்பில் சிறிதாகவும், குடித் தொகையில் கூடியதாகவும் உள்ளது.

### குடித்தொகை

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 1981 ஆம் ஆண்டிற்கு பின் அம்பாறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் முழுமையான குடிசனக் கணிப்பு இடம் பெறவில்லை. 2001 ஆம் ஆண்டு குடிசனக் கணிப்பில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் மாத்திரமே குடிசனக் கணிப்பு இடம்பெற்றது. இம் மாவட்டத்திலும் கூட குடிசனக் கணிப்பு ஒழுங்காக இடம் பெற்றதென்று சொல்வதற்கில்லை. யுத்தத்தினாலும், அழிவாலும், தமிழர் சார்பான புள்ளி விவரங்கள் முழுமையாக இடம் பெறவில்லையென கருத இடமுண்டு. யுத்தம், புவிசார் அரசியல், நிவாரண நடவடிக்கைகளினால் தரவுகள் கூடக் குறைய காட்டப்பட்டிருக்க கூடிய சூழ்நிலைகள் காணப்படுகின்றன.

## இடப்பெயர்வுகளால் குடாநாட்டிலிருந்து 3½ லட்சம் பேர் வெளியேற்றம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலப்பரப்பு, குடிசனத்தொகை விவரங்கள்- 2001 அட்டவணை 1இல் காட்டப்படுகின்றன.

அட்டவணை I

| மாவட்டம் | நிலப்பரப்பு (ச.கி.மீ) | மக்கள்தொகை (1981) | மக்கள்தொகை (2001) | குடிசனக்கணிப்பு இடைவேறுபாடு% | ஆண்டு வளர்ச்சி/ குறைவு விகிதம் | அடர்த்தி (ச.கி.மீ) |
|---|---|---|---|---|---|---|
| அம்பாறை | 4431 | 388,970 | 589,000 | +51.4% | +2.0 | 140 |
| மட்டக்களப்பு | 2633 | 330,333 | 486,000 | +47.1% | +1.9 | 186 |
| திருகோணமலை | 2729 | 255,948 | 340,000 | +33.0% | +1.4 | 135 |
| யாழ்ப்பாணம் | 1023 | 739,788 | 542,000 (490,621) | -26.7% | -2.0 | 583 |
| கிளிநொச்சி | 1281 | 91,764 | 127,000 | +38.4% | +1.6 | 106 |
| மன்னார் | 2002 | 106,235 | 152,000 | +43.0% | +1.7 | 81 |
| முல்லைத்தீவு | 2517 | 77,189 | 122,000 | +58.1% | +2.2 | 50 |
| வவுனியா | 1967 | 95,428 | 150,000 | +57.2% | +2.2 | 81 |
| மொத்தம் | 18583 | 2085655 | 2,508,000 | +20.2 | | 135 |
| இலங்கை | 65,610 | | 18,732,000 | +26.2 | | 299 |

(மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்புக்கள் 2001இற்குரியது)

2001 இல் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் 25 லட்சம் மக்களைக் கொண்டிருந்தன. இது இலங்கையின் மக்கள் தொகையில் 13.4% ஆகும். எனினும் உள்ளூர் இடம்பெயர்வு, யுத்தம் காரணமாக புள்ளி விவரங்களின் நம்பகத் தன்மையில் ஐயம் எழுகின்றது. இன்று மக்கள் தம் இருப்பிடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருப்பதால் குடித்தொகை துரிதமாக அதிகரித்துக் கொண்டு வருகின்றது. யாழ்ப்பாண மாவட்டம் இன்று 650,000 மக்களைக் கொண்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் இடம் பெயர்வு இடம்பெறாது இருப்பின் 2006 இல் 10 லட்சத்துக்குமேல் இருக்க வேண்டும்.

ஏ-9 பாதை 2002 இல் திறந்த பின் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களின் மக்கள் தொகை 2001 இலும் பார்க்க குறைவடைந்துள்ளது. இம் மாவட்டங்களில் அகதிகளாகவும், இடம் பெயர்ந்தும் இங்கு தங்கியிருந்தவர்கள் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திற்குத் திரும்பியுள்ளனர். வெளிமாவட்டங்களிலிருந்து மக்கள் மீளக் குடியேறியதால் வடபகுதியின் குடிசனத் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 2002 புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் வடமாகாண மாவட்டங்களில் மீளக் குடியேற்றத்தினால் மக்கள் தொகை அதிகரித்தது.

எனினும் 2006 தரை வழியாக குடிசன அசைவு முற்றாக நின்று விட்டது. மீண்டும் ஏற்பட்ட யுத்த சூழ் நிலையால் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து கடல்வழி, வான் வழியாக குறிப்பிடத்தக்க தொகையினர் தென்னிலங்கைக்கும் பிறநாடுகளுக்கும் இடம்பெயர்ந்துள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் மக்கள் தொகை அதிகரிப்பு விவரம்-1871-

அட்டவணை II

| ஆண்டு | வடக்கு | குடித்தொகை அதிகரிப்பு | %ல் | கிழக்கு | குடித் தொகை அதிகரிப்பு | %ல் | மொத்தம் | அதிகரிப்பு எண்ணிக்கையில் | %ல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1871 | 281,666 | | | 112,569 | | | 394,235 | | |
| 1881 | 302,500 | 28,834 | +10.2 | 127,555 | 14,986 | +13.3 | 430,055 | +35,820 | +9.1 |
| 1891 | 319,296 | 16,796 | +5.6 | 148,444 | 20,889 | +16.3 | 467,740 | +37,685 | +8.8 |
| 1901 | 340,936 | 21,640 | +8.0 | 173,602 | 25,158 | +16.9 | 514,538 | +46,798 | +10.0 |
| 1911 | 369,651 | 28,715 | +8.4 | 183,698 | 10,096 | +5.8 | 533,349 | +18,811 | +3.7 |
| 1921 | 384,829 | 5,478 | +1.5 | 192,821 | 9,123 | +5.0 | 567,650 | +34,301 | +6.4 |
| 1931 | 398,874 | 24,045 | +6.4 | 212,421 | 19,600 | +10.2 | 611,295 | +43,645 | +7.7 |
| 1946 | 479,572 | 80,698 | +20.2 | 279,112 | 66,691 | +31.4 | 758,684 | +147,389 | +24.1 |
| 1953 | 570,650 | 91,878 | +19.1 | 354,410 | 75,298 | +27.0 | 925,060 | +166,376 | +21.9 |
| 1963 | 741,341 | 170,691 | +29.9 | 546,474 | 192,064 | +54.2 | 1,287,815 | +362,755 | +39.2 |
| 1971 | 874,626 | 133,285 | +18.0 | 717,571 | 171,897 | +31.5 | 1,592,197 | +304,382 | +23.6 |
| 1981 | 1109,400 | 234,774 | +26.8 | 975,100 | 257,529 | +35.9 | 2,084,500 | +492,303 | +30.9 |
| 2001 | 1093,000 | -16,400 | -1.5 | 1415,000 | 439,900 | +45.1 | 2,508,000 | +423,500 | +20.3 |

(மூலம்: இலங்கை குடிசன கணிப்புகள்)

1871-1946 இடைப்பட்ட காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் குடிசனத்தொகை 36,4451 பேரால் அதிகரித்தது. இவ் அதிகரிப்பு 92.4%ஆகும். எனினும் வடக்கிற்கும், கிழக்கிற்கும் இடையே அதிகரிப்பில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இக் காலப்பகுதியில் வடக்கு 197906 பேரால் (41.2%) அதிகரிக்க, கிழக்கு 166543 பேரால் (148%) அதிகரித்தது. எனினும் விகிதத்தில் வடக்கு 41.2 விகிதத்தாலும், கிழக்கு 148 வீதத்தாலும், அதிகதித்தது. 1946-1971 இற்கும் இடைப்பட்ட காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் குடிசனத்தொகை 833513 பேரால் 110% அதிகரித்தது. வடக்கு மாகாணம் இக் காலத்தில் 395054 பேரால் 82.04% அதிகரிக்க கிழக்கு மாகாணம் 438459 பேரால் 157% அதிகரித்தது. 1981-2001 இற்கும் இடைப்பட்ட காலத்தில் இம் மாகாணங்களில் குடிசன வளர்ச்சி 423500 பேராக (20.3%) இருந்தது. எனினும் வடக்கு இக்காலப்பகுதியில் 16400 பேரால் (1.47%) மக்கள் தொகை குறைவடைந்தது. வட மாகாணத்தில் குடிசனக் குறைவு குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலேயே ஏற்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தின் குடித்தொகை 1981 இல் 739,788 மேலாக இருந்து, 2001 இல் 490,621 மேலாகக் குறைவடைந்தது. இக் காலப்பகுதியில் ஆண்டுக்கு மக்கள் தொகை 2% வீதமாகக் குறைவடைந்து சென்றது. அரசியல் பதற்றநிலை, யுத்தம், இடம்பெயர்வு, உயர் [illegible] கல்களால் யாழ்ப்பாணக் குடாநாட்டு

மக்கள் பெரியளவில் உள்ளூர், சர்வதேச இடப்பெயர்விற்குட்பட்டனர். மேலும் குடும்ப மீள் இணைவுக்காக பெருமளவு சர்வதேச இடப்பெயர்வு ஏற்பட்டுள்ளது. இன்று சர்வதேச ரீதியில் வாழும் இலங்கைத் தமிழர் விவரம் அண்ணளவாக பின்வருமாறு.

1983இற்கு பின்னர் 500,000 இற்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாக மதிப்பிடப்படுகின்றது. இன்று கனடாவில் ஏறத்தாழ 250,000 ஐக்கிய இராச்சியத்தில் 85,000, பிரான்சில் 50,000, ஜேர்மனியில் 45,000, சுவிற்சர்லாந்தில் 25,000, நோர்வேயில் 15,000, பெல்ஜியத்திலும் நெதர்லாந்திலும் 7,000, டென்மார்க்கில் 5,000, இத்தாலியில் 5,000, சுவீடனில் 4,000, அவுஸ்திரேலியாவில் 25,000, நியூசிலாந்தில் 7,500, ஐக்கிய அமெரிக்காவில் 10,000 இலங்கைத் தமிழர்கள் இருப்பதாக கணிக்கப்படுகின்றது. இவர்களுள் மிகப் பெரும்பான்மையினர் யாழ்ப்பாண மாவட்டத்து வழித்தோன்றல்களாவர்.

இக் காலப்பகுதியில் வட மாகாணத்தின்

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடித்தொகையும், நிலக்குடியேற்றங்களும்**
**பாகம் 1**

ஏனைய நான்கு மாவட்டங்களும் துரிதமான குடிசன வளர்ச்சியைப் பெற்றுள்ளன. இதே காலத்தில் கிழக்கு மாகாணத்தின் மக்கள் தொகை 439900 பேரால் 45% அதிகரித்தது. 1871 இல் இருந்து 1981 வரையும் வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணத்திலும் பார்க்க கூடுதலான மக்கள் தொகையைப் பெற்றிருந்தது. ஆனால் முதன் முறையாக 2001 ஆம் ஆண்டுக் கணிப்பில் கிழக்கு மாகாணம் வடக்கு மாகாணத்திலும் பார்க்க கூடுதலான மக்களைக் கொண்டுள்ளது.

அட்டவணைIII

| ஆண்டுவடக்கு (%) | கிழக்கு (%) | வடக்கு கிழக்கு (%) | மாகாணங்கள்1871 |
|---|---|---|---|
| 1871 | 11.7 | 4.7 | 16.4 |
| 1881 | 11.0 | 4.6 | 15.6 |
| 1891 | 10.6 | 4.9 | 15.5 |
| 1901 | 9.6 | 4.9 | 15.5 |
| 1911 | 9.0 | 4.5 | 13.5 |
| 1921 | 8.3 | 4.3 | 12.6 |
| 1931 | 7.5 | 4.0 | 11.5 |
| 1946 | 7.2 | 4.2 | 11.4 |
| 1953 | 7.0 | 4.4 | 11.4 |
| 1963 | 7.0 | 5.2 | 12.2 |
| 1971 | 6.9 | 5.7 | 12.6 |
| 1981 | 7.5 | 6.6 | 14.1 |
| 2001 | 5.8 | 7.6 | 13.4 |

இலங்கைக் குடித் தொகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலை வீதத்தில் அட்டவணைIII இல் காட்டப்படுகிறது. (மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்புகள்)

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் 1871 இல் 16.4 மக்களைக் கொண்டிருந்தது. 1946 இல் இதன் வீதாசாரம் 11.4 ஆகக் குறைந்து, 1981 இல் 14.1 ஆக அதிகரித்து 2001இல் 13.4ஆகக் குறைவடைந்துள்ளது. எனினும் 1946 இற்குப் பின்னர் இம் மாகாணங்களின் குடித்தொகை வீதம் சிறிதளவு அதிகரித்தது.

இம் மாகாணங்களின் குடித்தொகை அதிகரிப்பில் வடக்கிற்கும் கிழக்கிற்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன. வடமாகாணத்தின் குடிசனத்தொகை விகிதாசாரம் தொடர்ச்சியாக குறைவடைந்து வந்துள்ளது. 1971 இல் நாட்டின் மொத்த சனத் தொகையில் 11.7 வீதத்தைக் கொண்டிருந்த வடக்கு 2001 இல் 5.8 வீதத்தையே கொண்டிருந்தது. இந்த வீழ்ச்சி மேலோங்க முக்கிய காரணம் தொடர்ச்சியான குடிவெளியேற்றமாகும். இம்மாற்றத்தினை மாவட்ட மட்டத்தில் மிகத் தெளிவாகக் காணலாம். 1871 இல் யாழ்ப்பாண மாவட்டம் இலங்கையின் சனத்தொகையில் 10.3 வீதத்தைக் கொண்டிருந்தது. இவ்வீத அளவு படிப் படியாகக் குறைந்து 1946 இல் 6.1 வீதமாகியது. இது 1963 இல் 5.8%மாகவும் 1971 இல் 5.5% மாகவும், 1981 இல் 5.0% மாகவும், 2001 இல் 4.9%மாகவும் குறைவடைந்துள்ளது. எனினும் கிளிநொச்சி, மன்னார், முல்லைத் தீவு, வவுனியா மாவட்டங்களின் பங்கு அதிகரித்துள்ளது.

கிழக்கின் குடிசனத் தொகையின் பங்கு 1871 இல் 4.7% ஆக இருந்து 1946 இல் 4.2% ஆகக் குறைவடைந்து பின்னர் படிப்படியாக அதிகரித்து இன்று 7.6% ஆகக் காணப்படுகின்றது. இவ் அதிகரிப்பிற்கு குடியுள்வருகை காரணமாகும். அம்பாறை, திருகோணமலை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
*முன்னாள் துணைவேந்தர்*

மாவட்டங்கள் தங்களது பங்கினை அதிகரித் துள்ளன. திருகோணமலை 1946 இல் நாட்டின் குடித்தொகையில் 1.1% தைக் கொண்டிருந்தது. இன்று இதன் பங்கு 1.5% இற்கு மேல் அதிகரித் துள்ளது. இதேபோல் அம்பாறை மாவட்டத்தின் பங்கும் இன்று 3.14% ஆக அதிரித்துள்ளது

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் மக்கள் பரம்பலை நோக்குமிடத்து இம் மாகாணங்களின் குடிசனத்தொகை அடர்த்தி தேசிய குடிசனத் தொகை அடர்த்தியிலும் (299) பார்க்க அரைவாசியாக (135) உள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் குடிசனத்தொகை அடர்த்தி தேசிய குடிசனத் தொகை அடர்த்தியிலும் பார்க்க இருமடங்கு உயர்வாகவும், மாகாண குடிசனத் தொகை அடர்த்தியிலும் பார்க்க நான்கு மடங்கு உயர்வாகவும் உள்ளது. வடக்கு, கிழக்கு பிரதேச செயலக/உதவி அரசாங்க அதிபர் பிரிவு அடிப்படையில் குடிசன அடர்த்தி வேறுபாடு உயர்வாகவுள்ளது. இரண்டு மாகாணத்திலுள்ள 78 பிரதேச செயலக/ உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் யாழ்ப்பாண நகர், நல்லூர், வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு, வடமராட்சி தெற்கும் மேற்கும், வடமராட்சி வடக்கு, திருகோணமலை நகரும், அயற் பகுதியும், கிண்ணியா, ஏறாவூர் நகரம், மண்முனை வடக்கு, காத்தான்குடி, கல்முனை (முஸ்லிம்), கல்முனை (தமிழ்) ஆகிய பிரிவுகள் சதுரகிலோ மீற்றருக்கு 1000 பேருக்கு கூடிய குடிசன அடர்த்தியைக் கொண்டுள்ளன. காத்தான்குடிப் பிரிவு சதுரகிலோ மீற்றருக்கு 10,350 பேரையும், ஏறாவூர் நகர் 9,160 பேரையும் கொண்ட மிக நெருக்கமான குடிசன அடர்த்தி கொண்ட பிரிவுகளாகும். வடக்கில் நெடுந்தீவு, பச்சிலைப்பள்ளி, பூநகரி, கண்டாவளை, ஒட்டிசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு, முசலி, மடு, மாந்தை மேற்கு, செட்டிக்குளம் ஆகிய பிரிவுகளும், கிழக்கில் பதவிசிரிபுர, கோமரன்கடவெல, மொறவேவா, செருவில், கந்தளாய், ஈச்சலம்பத்தை, கோறளைவடக்கு, ஏறாவூர்பற்று, மண்முனைதென்மேற்கு, மண்முனை மேற்கு, பாணம, படியத்தலாவ, மகாஓயா பிரிவுகள் மிகவும் குடிசன அடர்த்தி குறைந்த பகுதிகளாகவுள்ளன. அட்டவணை IV இல் பிரிவுகள் அடிப்படையில் குடிசன அடர்த்தி தரப்பட்டுள்ளது.

*(அட்டவணை IV கட்டுரையின் அடுத்தவாரத் தொடரில் இடம்பெறும்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியன் பிரீமியர் லீக் அணிகளால் இழுக்கப்படும் வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள்!



இந்திய பிரீமியர் லீக் 'ருவெண்ரி - 20' போட்டிக்கான சென்னை 'சுப்பர் கிங்ஸ்' அணிக குத் தென்னாபிரிக்க முன்னாள் அணித் தலைவர் கெப்ளர் வெஸ்சல்ஸ நியமிக்கப்பட்டுள்ளார்.



வெசல்ஸ்

இந்திய கிரிக்கெட் சபை சார்பில் பிரிமியர் லீக் 'ருவெண்ரி - 20' கிரிக்கெட் போட்டி நடத்தப் படுகிறது. 8 அணிகள் பங்கேறகும் இந்தப் போட்டி 8 நகரங்களில் நடத் தப்படுகிறது. இந்தப் போட்டி ஏப்ரல் 18 ஆம் திகதி முதல் ஜூன் 1 ஆம் திகதி வரை நடக கிறது.

இந்தப் போட்டிக்கான ஒவ்வொரு அணியி லும் வெளிநாடு மற்றும் உள்ளூர் வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இந்தப் போட் டியில் பங்கேற்கும் அணிகளில் ஒன்றான சென்னை 'சுப்பர் கிங்ஸ்' அணியில் டோனி, ஹைடன், முரளிதரன் உட்பட முன்னணி வீரர் கள் பலர் இடம் பிடித்துள்ளனர்.

சென்னை 'சுப்பர் கிங்ஸ்' அணியின் பயிற் சியாளராக தென்னாபிரிக்க அணியின் முன் னாள் அணித்தலைவர் கெப்ளர் வெஸ்சல்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். 50 வயதான வெஸ் சல்ஸ் ஆஸ்திரேலிய அணிக்காகவும் விளை யாடியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பயிற்சியாளர் தேர்வு குறித்து சென்னை அணித் தேர்வாளர் வி.பி. சந்திரசேகர் கூறுகை யில்,

'4 சர்வதேச வீரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினோம். பயிற்சியாளராக வெஸ்சல்ஸ் ஒரு ஆண்டுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அவர் மார்ச் 20 ஆம் திகதி பொறுப்பேற்கிறார். வெஸ்சல்ஸின் அனுபவம் சென்னை அணிக்கு உதவிகரமாக இருக்கும்' என்றார்.

பெங்களூர் அணிக்கு ஆஸ்திரேலியாவைச் சேரந்த ஜோன் புச்சனனும், மொகாலி அணிக்கு ஆஸ்திரேலியாவின் ரொம் மூடியும், ஐதராபாத் அணிக்கு ரொபின்சிங்கும் பயிற்சியாளராக ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் ஜெய்ப்பூர் அணியின் தலைவர் மற்றும் பயிற்சியாளராக ஆஸ்தி ரேலிய முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் நியமிக்கப்பட்டுள்ளார்.

**தண்டனையிலிருந்து தப்பினார் ஹைடன**

ஹர்பஜன் சிங்கை விமர்சித்த விவ காரத்தில் ஆஸ்திரேலிய வீரர் மத்யூ ஹைட னுக்கு அந்நாட்டு கிரிக்கெட் சபை முறைப்படி கண்டனம் தெரிவித்துள்ளது. ஆனாலும் அபரா தம் மற்றும் தண்டனையிலிருந்து ஹைடன் தப்பிவிட்டார்.

இன்படி எதிரணி வீரர்களை வெளிப்படையாக தரம் தாழ்த்தி விமர்சிப்பது தவறு. இதன் அடிப படையில் பார்த்தால் ஹைடன், வானொலி மூலம் விமர்சித்துள்ளார். இதனால் அபராதம் அல்லது போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட லாமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வெறும் கண்டனத்துடன் தப்பினார்.

இப்பிரச்சினை குறித்து ஹைடன் கூறு கையில்,

'யாரையும் நான் தரம் தாழ்த்தி பேச வில்லை. ஆஸ்திரேலிய நடத்தைகளின் படி கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் உணர்வுக்கு மதிப்பளித்து இதனை ஏற் கிறேன்.' - என்றார்.

## ஹொக்கின் ஓய்வினால் வெற்றிடமாகும் ஆஸ்திரேலியப் பந்து வீச்சு வரிசை

இந்திய, ஆஸ்திரேலிய வீரர்களிடையே வாக்குவாதம் தொடர்கிறது. சிட்னி டெஸ்டின் போது ஆஸ்திரேலியாவின் சைமண்ட்சை நோக்கி ஹர்பஜன் 'குரங்கு' எனத் திட்டியதாக பிரச்சினை வெடித்தது. பின்னர் சிட்னியில் நடந்த முக் கோண ஒரு நாள் போட்டியின் போது இஷாந்த் - சைமன்ட்ஸ் இடையே சர்ச்சை ஏற்பட்டது.



பிரட் ஹொக்

இதேபோட்டியில் ஹர் பஜனைப் பார்த்து 'முட்டாள் பையன்' என்று அடிக்கடி திட் டியதாக ஹைடன் மீது இந் திய அணியினர் குற்றம் சாட் டினர். இந்தச் சூழலில் வானொலி ஒன்றுக்கு பேட்டியளித்த, ஹைடன் கொஞ்சம் 'ஓவராக' பேசினார். ஹர்பஜனை 'எதற் கும் பயன்படாத களைப் பயிர்' என்று விமர்சித்தார். இதற்கு இந்திய கிரிக்கெட் சபை கடும் அதி ருப்தி தெரிவித்தது. இது பற்றி ஆஸ்திரேய கிரிகெட் சபை விசாரணை நடத்தியது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் விதிமுறை 9

**ஹொக் ஓய்வு**

முக்கோணக் கிரிக்கெட் போட்டி முடிந் ததும் ஆஸ்திரேலிய சுழற் பந்து வீச்சாளர் பிரட் ஹொக் சர்வதேச போட்டியிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித் துள்ளார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி சுழற்பந்து வீச்சாளர் பிரட் ஹொக். 1996 ஆம் ஆண் டில் சர்வதேச போட்டியில் அறிமுகமான பிரட் ஹொக், மாயாஜால சுழற்பந்து வீச் சாளர் ஷேன்வோர்ன், மெக்கில் ஆகியோர் ஆதிக்கம் செலுத் தியதால் அணியில் இடம் கிடைக்காமல் தவித்து வந் தார். அவர் 7 ஆண்டு இடை வெளிக்குப் பின் டெஸ்ட் அணியில் 2003 ஆம ஆண்டில் இடம்பிடித்தார்.

வோர்ன் ஓய்வுக்குப் பின் பிரட் ஹொக் குக்கு ஆஸ்திரேலிய அணியில் நிரந்தர இடம் கிடைத்தது.

இந்திய அணிக்கு எதிராக சமீபத்தில் நடந்த டெஸ்ட் போட்டி தொடரில் அவர் 8 விக்கெட்டுகள் கைப்பற்றினார். ஒருநாள் போட்டி தொடரி லும் விளை யாடி வருகிறார்.



ஹைடன்

இந்த நிலையில் 37 வயதான பிராட் ஹொக், ஆஸ்திரேலியாவில் நடந்து வரும் போட்டி முடிந்ததும் சர்வதேச கிரிக்கெட் போட டியிலிருந்து ஓய்வு பெறுவதாக மெல்போர்னில் அறிவித்தார்.

இதுகுறித்து பிராட் ஹொக் கூறுகையில்,

இந்திய கிரிக்கெட் லீக்கில் விளை யாடுவதற்காக நான் ஓய்வு முடிவெடுக்க வில்லை. அது பற்றி நான் நினைக்கவில்லை. சில தனிப்பட்ட பிரச்சினை காரணமாக ஓய்வு முடிவை மேற்கொண்டேன். சில மாதங்கள் நான் ஊரிலிருக்கமாட்டேன். எனது வாழ்க் கையல் நான் புதிய அத்தியாயத்தைத் தொடங்க வேண்டும். அது குறித்து முடிவெடுக்க வேண் டும்.

எனது கிரிக்கெட் வாழ்க்கை மகிழ்ச்சியை யும் மனவருத்தத்தையும் கொடுத்திருக்கிறது. சரியான நேரத்தில் தான் இந்த முடிவை எடுத்துள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

2003 மற்றும் 2007ஆம் ஆண்டுகளில் உலகக் கிண்ணத்தை வென்ற ஆஸ்திரேலிய அணியில் இடம்பிடித்திருந்த பிரட் ஹொக் 7 டெஸ்டில் விளையாடி 17 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். 121 ஒருநாள் போட்டியில் ஆடி 154 விக்கெட்டுகள் கைப்பற்றியிருக் கிறார்.


ஹொக் ஓய்வால் ஆஸ்திரேலிய சுழற்பந்து வீச்சில் பெரும் இடைவெளி ஏற்பட்டுள்ளது.

- டிலான்

# அல்வாய்க் கிராம மக்கள் எதிர்கொண்ட போக்குவரத்து நெருக்கடி தீர்க்கும்

## வரப்பிரசாதமான புதிய வீதியும், இணைந்த பாலமும்

**போ**க்குவரத்தில் அல்வாய் மற்றும் அல்வாய் வடக்குக் கிராமங்களில் உள்ள மக்கள் எதிர் கொண்டு வந்த சிரமங்களுக்கு இப்போது முடிவு கட்டப்பட்டுள்ளது. புதிய



புதிய பாலத்தில் மகிழ்ச்சியுடன் சைக்கிளில் பயணம் செய்கிறார் ஒருவர்.

வீதி ஒன்றும், இணைப்புப்பாலம் ஒன்றும் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ள மையால் அப்பகுதிமக்கள் மிக மகிழ்ச்சி யுடன் போக்குவரத்துச் செய்கின்றார்கள்.

கிராமிய ஒருங்கிணைப்புத் திட்டத் தின் கீழ் அல்வாய், அல்வாய் வடக்கு ஆகிய கிராமங்களை இணைக்கும் புதிய வீதி, இணைப்புப்பாலம் என்பன அண்மையில் அரச அதிபரினால் திறந்து வைக்கப்பட்டன.

அல்வாய், அல்வாய் வடக்கு ஆகிய கிரா மங்களைச் சேர்ந்த மக்கள் தமது தேவை களுக்கென மேற்படி இரு கிராமங்களுக்கும் உடனுக்குடன் சென்றுவருவதற்கு வீதி ஒன்று இல்லாமையால் பல்லேறு சிரமங் களை எதிர்கொண்டு வந்தார்கள். சிறிய பாதை ஒன்று இருந்தபோதும் அது மேடு பள்ளம் நிறைந்ததாகவும், பற்றைகளால் சூழப்பட்டதாகவும் காணப்பட்டது. இத னால் இந்தப் பாதையால் பயணிப்பதற்கு மக்கள் அஞ்சினார்கள். நீண்ட தூரம் சுற்றிப் பயணம் செய்தே தமது தேவைகளை நிறைவுசெய்ய வேண்டியிருந்தது.

இந்த இடையூறுகளைக் களைவதற் கென அல்வாய் ஊரக மறுசீரமைப்புக் குழு 1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிரமதான முயற்சியின் மூலம் வீதி ஒன்றை அமைத்தபோதும் சுமார் மூன்று கிலோ மீற் றர் தூரம் இதில் பயணம் செய்யவேண்டி இருந்தமையால் அது மக்களுக்குப் பெரிய அளவில் உதவவில்லை. மழை காலங்களில் வெள்ளம் தேங்குகின்றமையால் அந்த வீதி குளமாக காட்சியளிக்கும். இதனால் மக்கள் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது.

இதனையடுத்து இரு கிராமங்களுக் கிடையேயும் நிரந்தர இணைப்பு வீதி ஒன்றை அமைப்பதற்கு 2005 ஆம் ஆண்டு அல் வாய் ஊரக மறுசீரமைப்புக்குழு முழு முயற்சியில் இறங்கியது. அதன் முதற் கட்டமாக இந்தக்குழு யாழ்.அரச அதிப ருடன் சந்திப்பு ஒன்றை ஏற்படுத்தி இந்த வீதியின் முக்கியத்துவத்தையும், அதனைச் சீரமைப்பதற்கான முன்னேற்றபாடுகளை யும் எடுத்துக்கூறினார்கள். இதனைய டுத்து அந்த வீதியை முழுமையாக சீரமைப் பதற்கு - உதவுவதற்கு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இணக்கம் தெரிவித்தார்.

எனினும் அல்வாய் வடக்குக் கிராமம் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்டதாகவும் அல்வாய் கிராமம் கர வெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்டதாகவும் அமைந் திருந்தமையாலும், பிர தேச சபைப் பிரிவுகளும் வெவ்வேறாக இருந் தமையாலும் இந்த முயற்சியில் சிறு சிறு தடங்கல்கள் ஏற்பட் டன.

ஆயினும் யாழ்.அரச அதிபரின் பெரு முயற் சியினால் பருத்தித் துறைப் பிரதேச செய லர் இரா.வரதீஸ்வரன், கர வெட்டிப் பிரதேச செய லர் ச.சத்தியசீலன் ஆகியோர் இணைந்து இந்த வீதியை அமைப் பதற்கான முழுமுயற் சியில் ஈடுபட்டார்கள்.



நீண்டகாலமாக ஒரு வீதி இல்லாமை யால் போக்குவரத்தில் பல் வேறு கஷ் டங்களை எதிர்கொண்டு வந்த இரு கிராம மக்களுக்கும் இந்த வீதிப்புனர மைப்பு பெரும் வரப்பிரசாதமாகவே அமைந்தது. இதற்கு அவர்களும் இந்த முயற்சிக்குத் தம்மால் இயன்ற முழு ஒத் துழைப்பையும் வழங்கியிருந்தார்கள்.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் மகிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் 10 லட்சம் ரூபாவும், பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் ஐக்கிய நாடுகள் அபி விருத்தித் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து 25 லட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கப்பட் டது.

மொத்தம் 35 லட்சம் ரூபா செலவில் கிரா மிய ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் முழுமையாக மீளமைக்கப்பட்ட இந்த வீதி யும், இணைப்புப் பாலமும் கடந்த மாதம் 24 ஆம் திகதி பொதுமக்களின் பாவனைக்கா கத் திறந்து வைக்கப்பட்டது. யாழ். அரச அதி பர் கே.கணேஸ் இவற்றைத் திறந்து வைத்தார்.


தமது தேவைகளை உடனுக்குடன் நிறைவு செய்ய முடியாமல் தவித்து வந்த அல்வாய், அல்வாய் வடக்கு ஆகிய இரு கிராமங்களைச் சேர்ந்த மக்களும் தற்போது மன மகிழ்ச்சியுடன் இந்த வீதியூடாகப் பயணம் செய்கின்றார்கள். முன்னர் சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்து தமது தேவைகளை நிறைவேற்றி வந்த மக்கள் இப்போது ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்து பணிகளைப் பூர்த்தியாக் கக் கூடிய வசதி கிடைத்துள்ளது. இரு கிராமங்களின் இந்த வீதியும், இணைந்த பாலமும் என்று மறக்காமல் நிலைத்து நிற் கக்கூடியதொன்றாக அமைந்துவிட்டது. ★

வல்லமுகனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெங்குப் பொருள் உற்பத்திக்குப் பேர்போன தென்மராட்சியில் இன்று தேங்காய்ப்பால் "பைக்கெற்று" களுக்கு மவுசு

தென்னைமர உற்பத்தியில் பெயர் பெற்ற தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் இன்று தேங்காய்ப் பால்மாவில் சமை



யல் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் பிரதேசத்தில் தேங்காய் விலை அதிகரிப்பினால் குடும்பச் சீவியத்தினை சமாளிக்க முடியாத குடும்பங்கள் தேங்காய்ப் பால்மா பைக்கற்றுக் களைப் பயன்படுத்துகின்றன.

ஏனைய பிரதேச மக்களின் அன்றாட வாழ்க்கையில் நிலையை தேங்காய் விலையேற்றம் எவ்வளவு தூரம் பாதிப்பினை ஏற்படுத்தியிருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே முடியாமல் இருக்கிறது.

தேங்காய் எமது நாட்டு மக்களின் அனைத்து சமையல் தேவைக்கும் அத்தியாவசிய பண்டமாக உள்ளது. தேங்காய் இல்லை யெனில் வீடுகளில் சமையல் பொருள்கள் இருந்தும் சமைக்க முடியாத நிலை அனைத்து இடங்களிலும் காணப்பட்டது. ஆனால் இன்றைய தேங்காய் விலை அதிகரிப்பானது பல குடும்பங்கள் தேங்காய் இன்றியே சாப்பாடு சமைக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

தென்னைவளம் மிக்கத் தென்மராட்சியிலேயே ஒரு தேங்காய் 80 ரூபாவரை விற்கப் படுகின்றது என்றால் அப் பிரதேசத்திலிருந்து யாழ்.மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களுக்குக் கொண்டு செல்லப்படும் தேங்காயின் விலை மக்களின் வாழ்க்கைச் செலவில் எந்த அளவுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதைக் கணக்கிட முடியாது.

தென்மராட்சிப் பிரதேசம், நாவற்குழிப் பாலம் தொடக்கம் எழுதுமட்டுவாழ்வரையான பகுதிகளை உள்ளடக்கியதாகும். இப் பிரதேசத்தின் மண்வளம் இடத்துக்கிடம் மாறுபட்

**- முரளி -**

டதாகும். நாவற்குழி தொடக்கம் கிளாலி வரையான கடலேரிப் பிரதேசமும், வரணி தொடக்கம் எழுதுமட்டுவாழ்வரையான நன்னீர் ஏரிக்கமும் பிரதேசத்தின் தென்னை வளம் சிறப்பாக அமைய வழிசமைத்தன.

மீசாலை தொடக்கம் தென்மராட்சி கிழக்குப் பகுதியின் பெரும்பாலான பகுதிகளில் தென்னை உற்பத்திக்குப் பொருத்தமான மண்வளம் காணப்பட்டதால் ஒவ்வொரு குடும்பமும் தென்னை உற்பத்தியை ஒரு தொழிலாக எண்ணிச் செயற்பட்டனர்.

ஒரு குடும்பம் வளம்பெற ஒரு தென்



னையும் ஒரு பசுமாடும் போதுமென எமது முன்னோர்கள் கருதினார்கள். அதனால் பிரதேசத்தில் அண்ணளவாக ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தென்னை மரங்கள் வளர்க்கப்பட்டது.

குடாநாட்டு மக்களின் தேங்காய் உற்பத்தியில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திற்கு அடுத்தபடியாகத் தென்மராட்சிப் பிரதேசமே திகழ்ந்தது. ஏனெனில் தென்னை உற்பத்தியின் பயனை இப்பிரதேசங்களின் மக்கள் முழுமையாக அனுபவித்தனர் என்றால் மிகையாகாது. தென்மராட்சிப் பிரதேசம் குழைக்காடு எனப் பெயர் பெற்றமைக்குத் தென்னை மர உற்பத்தியும் ஒரு காரணமாக அமைந்தது.

இவ்வாறான பச்சையம் மற்றும் செழுமை காரணமாக நாட்டில் வருடாவருடம் போதிய அளவு மழைவீழ்ச்சி காணப்பட்டது. அதனால் தேங்காய் உற்பத்தியும் தாராளமாக இருந் தது.

**ரயில் சேவை இருந்த காலத்தில்**

சுமார் 50 அல்லது 60 வருடங்களுக்கு முன்னர் ரயில் சேவை இடம் பெற்ற காலத்தில் தேங்காய், மண்ணெண்ணெய் போன்றவை தினமும் தென்னிலங்கையிலிருந்து குடாநாட்டுக்குக் கொண்டுவரப்பட்டன. மழை காலங்களில் இவற்றின் விலைகள் அதிகரித்துவிடும். தென்னிலங்கையிலிருந்து இவற்றினைப் ரயில் கொண்டு வராவிடின் சில பிரதேசங்களில் குறிப்பாக வலிகாமம்,

## ஒரு குடும்பம் நாளாந்தம் 4 தேங்காய்கள் பாவித்த காலம் மாறி ஒரு தேங்காயை 4 நாள்களுக்குப் பயன்படுத்தும் நிலை இப்போது...!

யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் தேங்காய், மண்ணெண்ணெய் விலை அதிகரிக்கும். அவ்வாறு விலை அதிகரிக்கும் வேளையில் குடாநாட்டு மக்களின் தேங்காய் தேவையினைக் கருதி தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து அப்பிரதேச சந்தைக்கு வியாபாரிகளால் வண்டில் களிலும், லொறிகளிலும் கொண்டு சென்று விற்கப்பட்டன. அக்காலங்களில் விலை அதிகரிப்பு ஏற்பட்டாலும் கூலி வேலை செய்பவர்கள் கூட அதனைச் சமாளிக்கக் கூடிய வருமான நிலையினை கொண்டிருந்தமையால் விலை அதிகரிப்பு மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை. இவ்வாறான நிலை அதிகரிப்பு மென்மேலும் குடாநாட்டு மக்களை தென்னை உற்பத்திக்கு ஊக்கு வித்ததே தவிர சோர்ந்து போகச் செய்யவில்லை. இன்றைய கால கட்டத்தில் வருமானம் ஏதுமற்ற நிலையில் வாழும் குடாநாட்டைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான குடும்பங்கள் உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்பினால் குடும்பச் சுமையினைச் சமாளிக்க முடியாத நிலை உள்ள வேளையில் தேங்காய் விலை அதிகரிப்பும் பாரிய சுமையாக அமைந்து விட்டது.

இந் நிலைக்குக் காரணம் எமது மக்களே என எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் முன்னைய காலங்களில் ஒரு தென்னைமரம் அதன் வளர்ச்சியை அடைந்தாலும் (சோடை) மரம் ஓலைகளை இழந்து மொட்டையாகக் காணப்பட்டாலும் அதனைத் தறிப்பதற்கு முன்வரமாட்டார்கள். அதன் அருகே தென்னம்பிள்ளையை பயிரிடுவர்.

தென்னை மரம் அனுமதியின்றித் தறிப்பது ஒரு சட்டவிரோதக் குற்றமாகக் கருதப்பட்டது. ஒரு தென்னையைத் தறிப்பவன் பெற்ற பிள்ளையை வெட்டிக் கொல்லும் "கொலைக்காரனாக" நமது முன்னோர்களால் கணிக்கப்பட்டனர்.



முதிர்ச்சி கண்ட தென்னை மரம் மழை காலத்தில் அல்லது கடும் காற்றுவீசும் காலத்தில் தானாக முறிந்து விழுந்தாலே தவிர கோடரி கொண்டு அதனைத் தறிக்க எவரும் விரும்பமாட்டார்கள். அவ் வாறு பயன்தந்த மரங்கள் தறிக் கும் பணிகள் சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்தன. மக்கள் தமது உயிர்களைக் காப்பாற்ற அமைக்க வெட்டப்பட்ட பதுங்கு குழிகளுக்குப் பயன்படுத்த சோடை மரங் களைத் தறிக்கத் தொடங்கினர்.

பின்னர் பயன்தரு தென்னை களும் வெட்டி வீழ்த்தப்பட்டன. பாதுகாப்புத் தேவை என்ற காரணம் சொல்லி இப்போதும் தென்னை மரங்கள் தடுப்பார், தட்டிக்கேட்பார் இன்றி வெட்டி நாசம் செய்யப்படுகின்றன. பிரதேசத்தின் பசுமை வளமும் பொருண்மிய வளமும் அழிக்கப்படுகின்றன.

**தென்னை மரத் தறிப்பு வேட்டை**

அன்று தொடங்கிய தென்னை மரத் தறிப்பு வேட்டை சுமார் 12 வருடங்களாக வகை தொகையின்றித் தறிக்கப்பட்டுப் பசுஞ்சோலைகள் பாலைவனங்களாக மாறின. தென்னந்தோப்புகள் எல்லைக் கட்டைக் காடாகின.

அத்துடன் குடாநாட்டில் பொழிந்த குண்டுமழையும் தென்னை மரங்களை அழிக்



கும் கருவிகளாக மாறின.

**மழை வீழ்ச்சியும் குறைந்து விட்டது**

தோப்புகள் சுடுகாடாக மாறி யதால் வருணபக வானும் எமது பிரதேசத்தில் தனது கடமை யைச் செய்யத் தவறினான். இதனால் மழை போதிய அளவு பெய்யத் தவறியதால் தேங்காய் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்தன. மழைவீழ்ச்சி குறைந்ததால் தென்னை பயிரிடுவதும் அருயது.

**நோயினால் தாக்கம்**

இருக்கும் தென்னை மரங்களைப் பராமரிக்க அதன் உற்பத்தியாளர்கள் பெரு முயற்சிகள் மேற்கொண்ட வேளையில் "மைற்ஸ்" என்னும் கொடிய நோய் தென்னை மரங்களில் பரவி உற்பத்தியைக் குறைத்து விட்டன. கொடிய நோயினை அழிக்கும் கிருமிநாசனிகள் குடாநாட்டில் கிடைப்பது குறை வாக இருந்த போதிலும் அரைஒரு மரங்கள் வைத்திருப்போர் பயன்படுத்த முன்வருவதில்லை.

பெருந்தோட்டத் தென்னைச் செய்கையாளர்களால் இறக்குமதி செய்யப்பட்ட தென்னை உரவகைகள் சிறு தோட்டச் செய்கையாளர்கள் உரவகைகளைப் பயன் படுத்த முன் வராமையும் தேங்காய் உற்பத்தி வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக உள்ளது.

**வீதி மூடப்பட்டதும் இன்னொரு காரணம்**

அடுத்து ஏ- 9 வீதி மூடப்பட்டதும் தேங்காய் விலை அதிகரிப்புக்கு ஒரு காரணமெனக் குறிப்பிடலாம். குடாநாட்டு மக்களின் பாவனைக்குக் குடாநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய் போதாமையால் தென்னிலங்கைப் பகுதியிலிருந்து புகையிரதத்திலும், லொறிகளிலும் தேங்காய் கொண்டு வரப்பட்டன. குருணாகல், புத்தளம், காலி ஆகிய மாவட்டங்களில் இருந்தும் பெருமளவு தேங்காய்கள் கொண்டு வரப்பட்டன.

புகையிரத சேவை குடாநாட்டுக்கு நிறுத்தப்பட்ட பின்னர் குருணாகல், புத்தளம், வன்னி ஆகிய மாவட்டங்களிலிருந்து தினமும் கணிசமான லொறிகளில் கொண்டு வரப்பட்டன. குடாநாட்டுத் தேங்காய்களுடன் ஏனைய மாவட்டத் தேங்காய்களும் யாழ்.குடாநாட்டுச் சந்தைகளுக்குக் கொண்டு வரப்பட்டதால் சராசரி வருமானமுள்ள மக்களால் தமது தேவைகளுக்குத் தேங்காய்க் கொள் வனவு செய்ய முடிந்தன. ஏ-9 வீதி மூடப் பட்டதால் வெளி மாவட்டத் தேங்காய்கள் கொண்டுவர முடியாமல் போனதும் விலை அதிகரிக்க வழிசமைத்தன.

எமது பிரதேச தென்னை வளங்கள் எம்மால் அழிக்கப்படாதிருந்தால் இன்று நாம் கப்பலில் கொண்டு வரப்படும் தேங்காய்ப் பால்மாப் பைக்கற்றினை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. தென்னிலங்கையில் இருந்து தேங்காய் கொண்டுவர எமது வர்த்தப் பிரமுகர்கள் முயற்சி செய்கின்ற போதிலும் அதிகரித்த கப்பல் கட்டணத்தினால் அதனைக் கைவிடவேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது.

தென்மராட்சிப் பிரதேசச் சந்தைகளில் முன்னர் சுமார் ஒரு லட்சத்திற்கு அதிக மான தேங்காய்கள் விற்பனைக்காகக் கொண்டு வரப்பட்டன. ஆனால் தற்போது சுமார் இரண்டாயிரம் தொடக்கம் மூவாயிரம் தேங்காய்வரையே கொண்டு வரப்படுவதாக அறிய முடிகிறது.

ஒரு குடும்பத்தினர் தினமும் நான்கு தேங்காய்கள் பயன்படுத்திய காலம் மலையேறி, தற்போது ஒரு தேங்காயை நான்கு குடும்பங்கள் பாவிக்கும் நிலையும் ஒரு குடும்பம் ஒரு தேங்காயை நான்கு நாள்களுக்குப் பயன்படுத்தும் அளவுக்குத் தேங்காய் விலை அதிகரிப்பு குடாநாட்டு மக்களைப் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது வெளிப்படை. ✱




சீனாவில் கல்வி கற்று USA இல் வைத்தியராக வேலை செய்யுங்கள்

நீங்கள் A/L விஞ்ஞான பிரிவில் கல்வி கற்றவரா

இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

விபரங்களை அறிந்து கொள்ள

தமிழில் : 0773 492 834

ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் 0773 834 534

குளோபல் எடிகேசன் சென்ரர்

320.7 1/1, காலி வீதி, கொழும்பு 03.

0115 869 557

Advertise 9814


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நடந்து முடிந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3A சித்தியடைந்த வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவிகளான

சசிலா சிற்றம்பலம்
இவாஞ்சலின் மிருணாளினி ஜெயராஜா
சசிகலா சுப்பிரமணியம்
மேரி அனுஜா பேர்டினன்ட்
நீரஜப்பிரியா சதானந்தன்
தாரணி இரகுநாதன்
துளசி தர்மகுலசிங்கம்
கலைவதனி கனகலிங்கம்

ஆகியோரை மேலும் கல்வியில் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

லயன்ஸ் கழகம்,
யாழ்ப்பாணம்.
(71585)

## ஓராண்டு நினைவுதினம்

மலர்ந்தது 13 07 1936 — மறைந்தது 14 03 2007



அமரர் ஐயம்பிள்ளை செல்லக்கிளி

திதி: அபரபக்க தசமி 02.03.2008

வீடோ இருண்டென்தன் வாசலும் வெளித்ததுவோ
எண்ணித் தவிக்கின்றேன் - என் அப்பாவே!
எனக்காக வாசலிலே எந்நாளும் காத்திடுவீர்
அன்பு மகள் - மாலா.

பன்னிரண்டு திங்கள் பார்த்திருக்கப் பேரனதப்பா
பார்க்கும் இடமெல்லாம் உங்கள் குரல் கேட்குதப்பா
நீண்ட துயரமப்பா நிம்மதி இழந்தோமப்பா
மீண்டுமெம் மனை தேடி ஒரு பிறப்பாய் வாருங்கப்பா!

சேச் லேன்,
கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.
(71564)

## புறொயிலர் தேவை

புறொயிலர் விற்பனைக்குத் தேவை.
வைத்திருப்போர் உடன் தொடர்பு கொள்ளவும்.
வீனஸ் பாம்
பலாலி வீதி, (நல்லூர்AGA அலுவலகம் முன்பாக)
திருநெல்வேலி.

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

## விற்பனைக்கு

மிகவும் அழகாகத் தயாரிக்கப்பட்ட 'ரெலி போன் பூத்' (Telephone Booth), ஒலிம்பியா தட்டச்சு இயந்திரம் (Olimpiya Type writer Portable), இடமாற்றம் பெற்ற ஆசிரியையின் புதிய நிலையிலுள்ள Jailing Motor Cycle மற்றும் நல்ல இன கன்னிப்பசு மாடு (மோதம் நிரம்பிய சினையுடன்) விற்பனைக்குண்டு.

*தொடர்பு:*
முத்துத்தம்பி ஒழுங்கை,
சுதுலை தெற்கு, மானிப்பாய்.
T.P.: 021 222 3206
(71579)

## தேவை

பேனா மற்றும் பிளாஸ்டிக் பொருள்களை திருகோண மலை, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாகாணங்க ளில் விநியோகிப்பதற்கு நல்ல அனுபவமும் தேர்ச் சியுமிக்க விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

விண்ணப்பதாரர்கள் க.பொ.த.சாதாரண தரம் மற்றும் உயர்தரம் சித்தியடைந்தவராகவும் நல்ல முன் அனுபவம் மிக்கவராகவும் இருத்தல் வேண்டும்.

*தொடர்பு:*
Camen Plastics ltd
No.545, Sri Sangaraja Mawatha, Colombo- 10,
0773346157, 0775215121
e-mail penpal@eurekaly.
(சி/55141)

## Uduvil Girls' College
### Invites

Parents, Past pupils and Well wishers
to its
**Primary School Sports Meet 2008**
*" We are the World..."*
2008 March 3rd (Monday) 1.00 p.m.
*Chief Guest:*
**Mrs.S.Jeyaveerasingam**
*Principal, Manipay Ladies College.*
(C/551642)

## மாங்கல்யா திருமண சேவை

*19 வருஷம் பூர்த்தியாகி பங்குனி மாசம் 1ஆம் திகதி 20 ஆவது வருஷம் கால்பதித்து வீறுநடைபோட்டு வருகிற திருமண சேவையை நீங்களும் நாடி உங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க் கையை நினைத்து பெற்றோர் எம்மிடம் தொடர்பு கொண்டு நம் பிக்கையானதும் திருப்தியானதுமான சேவையை நாடுங்கள்.*

*எம்மால் திருமணம் செய்யப்பட்ட மணமக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் வெளிநாடுகளிலும் தாங்கள் பெற்றெடுத்த செல்வங்களுடன் சீரும் சிறப்புடன் வாழ்கின்றார்கள். இன்றும் என் னுடன் தொடர்பு கொண்டு தங்கள் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள் கிறார்கள்.*

சகல நாள்களிலும் ஒரு மணிக்குப் பின் நாட வேண்டிய இடம்:

கு.திருவிலங்கம்
*90, சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர் வடக்கு.*
(69287) தொலைபேசி: 021 222 6043

# கேள்வி அறிவித்தல்

01. கீழ்வரும் வேலைகளுக்கான மூடிய கேள்விகள் அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.


| தொ. இல. | ஒப்பந்த குறியீட்டு இல. | ஒப்பந்த விவரம் | இக்ராட் தரம் | கேள்விப் பிணை | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01. | JF/BD/GA/DS/01/2008 | பிரதேச செயலகம் நிர்மாணித்தல் உடுவில் கட்டம்- I | M6/C7 | 62,000.00 | 1,000.00 |
| 02. | JF/BD/GA/DS/02/2008 | பிரதேச செயலகம் நிர்மாணித்தல் சண்டிலிப்பாய் கட்டம்- I | M6/C7 | 62,000.00 | 1,000.00 |
| 03. | JF/BD/GA/DS/03/2008 | பிரதேச செயலகம் நிர்மாணித்தல் நல்லூர் கட்டம்- II | M6/C7 | 62,000.00 | 1,000.00 |

02. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல கேள்விதாரர்களும் கொண்டிருக்க வேண்டும்.
   I) மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ICTAD தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   II) ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வித் தகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III) முன்னைய வேலைகளில் மோசமான, நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் கூடாது.
   IV) ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெறமுன்னர் ஒப்படைக்க வேண்டும்.
   V) கேள்விதாரர் VAT பதிவு செய்ததன் பிரதியையோ அல்லது VAT பதிவு செய்யப்படாமைக்கான கடிதத்தை ஆணையாளர், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் உறுதிப்படுத்திச் சமர்ப்பிக்க வேண்டும்.
03. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும், கேள்வி ஆவணங்களையும் இலவசமாக அலுவலக நேரத்தில் நிறைவேற்றுப்பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மா) யாழ்ப்பாணம் (தொ.இல. 021-2222634) பரிசீலிக்க முடியும்.
04. கேள்வி ஆவணங்களை 03.03.2008 தொடக்கம் 19.03.2008 பி.ப 1.00 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணம் (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம்(மா), யாழ்ப்பாணத்தில் செலுத்தி நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.
05. மூடிய கேள்விகளை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 24.03.2008 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்கவேண்டும். உடனடியாகக் கேள்வி திறக்கப்படும். இந்நேரம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.
06. மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்த செலவீனங்களுக்கும் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

க.கணேஷ்
தலைவர்,
மாவட்ட கேள்விச் சபை,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
(சி/551648)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சபாபதி
சிவலிங்கம்
*(இலங்கைப் போக்குவரத்துச் சபை முன்னாள் ஊழியர்)*

மலர்வு 17-08-1932
உதிர்வு 14-03-2007
திதி: 02.03.2008

பண்பின் பிறப்பிடமாய் பிறந்து
பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து
எங்களுக்கு நல்வழி காட்டி வளர்த்த அன்புத் தெய்வமே!
நீங்கள் சென்று ஓராண்டு ஆனதே ஐயா!

என்றும் உங்கள் நினைவில் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

18/11, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (69287)

## மரண அறிவித்தல்

*லயன் ந.பாலவிநாயகர்*



பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும் கொழும்பு நாரஹேன்பிட்டியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பாலவிநாயகர் (27.02.2008) புதன்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற V.S.நவரெட்ணம் மற்றும் பிறேமாவதி தம்பதியரின் அன்பு மகனும் கொழும்புத்துறையைச் சேர்ந்த நவரெட்ணம் காலஞ்சென்ற முத்துலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் சுமித்திராவின் அன்புக் கணவரும் தனுப்பிரியன், சுபீற்சா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வசந்தியின் அன்புச் சகோதரனும் திலகரெட்ணத்தின் அன்பு மைத்துனரும் மயூர காந், இரோஜன்காந், கௌசிகா ஆகியோரின் பாமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.02.2008 வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கொழும்புத்துறை.* (71591) நவரெட்ணம் (மாமா).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*எழுத்தாளர் 'ஈழமேகம்'யின் இயற்பெயர் தேவஞானசுந்தரம். சுதந்திரன் பத்திரிகையில், புகழ்பூத்த பத்திரிகையாளர் எஸ்.டி. சிவநாயகத்துடன் பணியாற்றியவர். பொதுவுடைமைக் கொள்கைகளை வரித்துக் கொண்ட அவர் தேசாபிமானி, புதுயுகம், சோவியத் நாடு ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகப் பின்னர் பதவி வகித்தார். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை நிறுவியவர்களில் ஒருவர். ஐம்பதுகள், அறுபதுகளில் ஈழத்துச் சிறுகதை அரங்கில் பேசப்பட்ட ஒருவர். அவரது சிறுகதைகளில் பொதுவுடமைவாதம் பளிச்சிடும். இவர் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக்கொண்டவர்.*

# வெளியேற்றப்பட்டான்!

அன்று குளிர் 'பட பட' என அடித்துக் கொண்டிருந்தது. இரவு பூராவும் கவிந்து கிடந்த பேயிருட்டு சிறிது சிறிதாக விலக முனைந்தது. கீழ் வானம் வெளுக்க ஆரம்பித்தது. எங்கோ உரக்கக் கூவிக் கொண்டிருந்த சேவலின் குரல் குடங்கிக் கிடந்த அவன் காதுகளில் துளாவியது. அந்தக் குரல் பட்டினி கிடக்கும் மனித இனத்தின் அபயக் குரலாக ஒலித்தது. வேலை ஸ்தலத்திலும் வீட்டு ஓரத்திலும் புழுப்போல் துடிக்கும் மனித குலத்தை எதிர் நோக்கியுள்ள கோரத்தின் அபாய அறிவிப்பாக அது அலறியது.

அவன் துடித்தெழுந்தான். படுத்த சாக்கையும் - தலை வைத்த மரக் குத்தியையும் ஒரு மூலையில் போட்டான். மறு பக்கத்தில் சோர்ந்து துவண்டு கிடந்த தன் மனைவியை தட்டி எழுப்பினான். தூக்கத்தை முறித்து அலட்டிப் புடைத்துக் கொண்டு எழுந்தாள். சத்து வாங்கப்பட்ட சக்கைகள் அந்த இரண்டு மனிதப் பிராணிகளும்.

அவசர அவசரமாக காலைக் கடனை முடித்து விட்டு, கசக்கிப் போட்டிருந்த கந்தல் வேட்டியை எடுத்துக் கட்டிக் கொண்டான். பானையில் எஞ்சியிருந்த பழங்கஞ்சியை குடித்ததும் குடியாததுமாக வாயில் ஊற்றிவிட்டு புறப்பட்டான். இந்த ஆரவாரத்தில் எலும்புக் குவியல்களாக மூலை ஒதுக்கில் சுருண்டு கிடந்த குழந்தைகள் விழித்துக் கொண்டன. அவர்களின் கூச்சலையும் பொருட்படுத்தாது அவன் வெளியேறினான். இரண்டு பையன்களுக்கு ஜுரம் ஆக்ரோசமாக அடித்துக் கொண்டிருந்தது. அவர்களுக்கு ஏதாவது மருந்து வாங்கி வருவதற்காக நகரத்திலிருந்த ஒரு வைத்தியரிடம் அவன் சென்று கொண்டிருந்தான்.

வைத்தியர் வீட்டை அடைந்ததும் அங்குமிங்கும் தன் விழிகளை ஏவி விட்டான். அப்போது தான் கொட்டாவி விட்டுக்கொண்டு கால் கைகளை வீசி எறிந்தபடி படலையை நோக்கி வந்து கொண்டிருந்தார். அவருக்கு முன்வந்த நாய் அவனை வரவேற்றது. அதன் பிசாசு போன்ற தோற்றத்திலும், வெறிபிடித்த குரைப்பிலும் அவன் மிரண்டுபோய் நின்றான். அந்த நாய் அகங்காரம் பிடித்த ஒரு பட்டாளத்தின் விஸ்வரூபமாக நின்றது.

பெரிய இடத்துப் பேர்வழிகள் தங்கள் செல்வத்தை - சொத்து சுதந்திரத்தை காப்பாற்றுவதற்காக நாய்களை வளர்க்கிறார்கள். அவர்களின் ஆட்சியும் துப்பாக்கிப் படை நாய்களை வைத்துத் தன் ஆதிக்கத்தை காப்பாற்றுகிறது.

வைத்தியரிடம் தன் குழந்தைகளின் நிலையைப் பற்றி பிரலாபித்தான். செல்வக் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற மருந்து கேட்டான். வைத்தியரைக் கூட்டிப்போக அவனிடம் எங்கே பணம் இருக்கப் போகிறது. வைத்தியரும் ஏதோ குளிசைகளை ஒரு சரையிலும் வேறொரு கலவையும் தயார் செய்தார். அவற்றைக் கொடுத்தவாறே பணத்திற்காக மறுகரத்தை நீட்டினார். அவன் வேட்டி முடிப்பை பார்த்தான். முடிச்சு காணப்படவில்லை. திகைத்துப் போனான். மருந்துக்காக முதல்நாள் இரவு அடுத்த வீட்டில் எடுத்த கடன் அவனுக்கு ஞாபகம் வந்தது. அவன் அவசரத்தில் அதை மறந்து விட்டிருந்தான்.

''ஐயா பணத்தை வீட்டில் விட்டு வந்து விட்டேன். சாயந்தரம் வந்து தருகிறேன்'' என்றான்.

வைத்தியர் இரு கரங்களையும் பின்வாங்கினார். அவர் பார்வையில் முறைப்பும், கழுகுத் தன்மையும் தொனித்தது. ''பணத்தைக் கொடுத்து விட்டு எடுத்துப் போ'' அவர் குரலில் கரடு முரடு காணப்பட்டது.

குழந்தைகளின் பயங்கரமான நிலையை எடுத்துச் சொன்னான். உயிர்ப் பிச்சைக்காக மன்றாடினான். ஆனால் மனிதம் என்று சொல்லுகிறார்களே அது துளி கூட எங்கும் ஊறவில்லை. மனித இதயங்களை வெறும் சல்லடையாக்கி விட்ட இந்த சமுதாயத்தில் அந்த வைத்தியரும் ஒரு பிராணிதானே. பணம் அவர் உள்ளத்தை கொன்று விட்டிருந்தது. மனிதத் தன்மையை இழந்த கோடானுகோடி மனித மரக் கட்டைகளில் அவரும் ஒருவர்.

அவன் திரும்பினான். ஆத்திரமும் - ஏமாற்றமும் மரத்துப் போயிருந்த அவன் உள்ளத்தில் நச்சரித்தன. அவன் வெறுப்பெல்லாம் வைத்தியரின் மீது பொதுக்கிட்டது. பாவம் அவன் ஏழை. உலக இயல்பை - சமுதாய உண்மையை அறியாதவன். தானும் தன்னைப் போன்ற லட்சோபலட்சம் மக்களும் அதே சமுதாயத்தின் கோளாறுக்கு பலி யானவர்கள் என்பது அவனுக்கு எங்கே தெரியப் போகிறது. நல்லவர்கள் - நல்லவர்களாக வாழப் பிறந்தவர்கள், இந்த சமுதாயத்தில் கெட்டவர்களாக்கப்படுகிறார்கள்- வாழ்வு மறுக்கப்படுகிறார்கள் என்ற பேதம் அவனுக்கு இன்னும் வரவில்லை.

தலை கிறுகிறுக்க முயல் பாய்ச்சலில் அவன் கால்கள் தாவின. வீட்டில் குழந்தைகள் தாங்க முடியாத ஜுரத்தால் துடித்துக் கொண்டிருந்தார்கள். மனைவியோ திக்பிரமை பிடித்தவள் போல தன் செல்வங்களை ஏக்கத்தோடு பார்த்தபடி இருந்தாள். ஈக்கள் 'படைத் தாக்குதல்' நடத்திக் கொண்டிருந்தன. முடை நாற்றம் வேறு.

அழுக்குப் பிடித்து கிடந்த துணியில் முடிச்சுப் போட்டு வைக்கப்பட்ட பணத்தை அவசர அவசரமாக அவிழ்த்தான். அந்த இரண்டு ரூபா நோட்டை மனைவியிடம் நீட்டி வைத்தியரிடம் போகுமாறு கூறினான்.

''பணத்தை மறந்து விட்டேன். வைத்தியர் மருந்து தர மறுத்து விட்டார்'' என்றான்.

எங்கோ மணி 'டாங் டாங்' என்று அடித்து முடித்தது. கதிரவனும் வானத்தின் உச்சியை நோக்கி தாவ முயன்று கொண்டிருந்தான். காற்று உஷ்ணம் ஏறிப்போய் ஜுரம் பிடித்த அந்தக் குழந்தைகளின் அனல் காக்கும் மூச்சுடன் போட்டி போட்டுக் கொண்டிருந்தது. வேலைக்கு சுணங்கி விட்டது. குழந்தகளின் உடம்பைத் தொட்டுப் பார்த்தான். கொல்லன் பட்டடை மாதிரிக் கனன்றது. வெறி பிடித்தவன் போல வெளியேறினான். அவன் மனைவியும் நடக்க ஆரம்பித்தாள். கைக் குழந்தை கதறியது. அன்னை போய்விட்டாள்.

வேலை ஸ்தலத்தில் சுணங்கியதற்காக அதிகாரி அவன் மீது சடைத்தார். இது மாதிரி சுணங்கினால் 'கல்தா' கொடுத்து விடுவதாக பயமுறுத்தினார். அதன் பிறகு;

''மேன்மை தங்கிய மகாராணியார் எங்கள் நாட்டிற்கு விஜயம் செய்கிறார். அப்போது இங்கும் வருவார். எங்கள் 'றெஸ்ட் ஹவுஸை' புனர் நிர்மாணம் செய்யுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. இன்றே வேலை ஆரம்பித்தாக வேண்டும்.'' கூடியிருந்த தொழிலாளிகள் பரக்கப்பரக்க விழித்தார்கள். அவர்கள் முகங்களில் ஒருவித வேண்டா வெறுப்பும் - அசூசையும் ரேகை கிழித்தன.

''மகாராணியார் வருவது எங்கள் நாடு செய்த தவப் பாக்கியம். நகரம் பூராவும் நாம் தோரணமும் - தோப்பும் போட வேண்டும். வீதிகளெல்லாம் தீபாலங்காரம் எடுக்க வேண்டும். மேன்மை தங்கிய ராணியாருக்கு விஸ்வாசமுள்ள பிரஜைகளாக நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்'' அவர் ஏதோ மேடைப் பிரசங்கி போல அடுக்கிக் கொண்டே போனார்.

தொழிலாளர்களுக்கு இது ஒன்றுமாய்ப் புரியவில்லை. அரசாங்கம் அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளமோ அரை வயிறு நிரம்பவும் போதாது. நித்தம் பட்டினியும் - பரிதவிப்பும்தான் வாழ்வெல்லாம். கடுமையான உழைப்பு அவர்கள் மென்னியைப் பிழிந்து உதிரத்தை குடித்து விட்டிருந்தது. குமுறும் ஆத்திரம் - கொந்தளிக்கும் அதிருப்தி - இதுதான் அவர்கள் வாழ்வுப் பிதுரார்ஜிதம். இந்த நிலையில் கடுமையாக உழைக்க வேண்டுமாம் - யாரோ ராணியார் வருகிறாராம். இதெல்லாம் அவர்களுக்கு, அந்த உழைத்துக் கெட்ட பஞ்சையர்களுக்கு ஆத்திரத்தைத்தான் கொடுத்தது. முகத்தை முறைப்பாக வைத்துக் கொண்டார்கள்.

அன்று வேலை முடிந்து அவன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். ஏதாவது ரொட்டித் துண்டு வாங்கிப் போவதற்காக ஒரு கடைக்குள் புகுந்தான். யாரோ இருவர் ஆவேசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவன் தன்னை அறியாமலே உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''ராணியார் இலங்கைக்கு வருகிறாராம். பொலனறுவைக்கும் வருவார். இங்கு 'றெஸ்ட் ஹவுசில் ஒருநாள் தங்குவார்'' என்றார் ஒருத்தர்.

''ஆ, வருகிறாரா அந்த அம்மையை தரிக்கும் பேறு நமக்கெல்லாம் கிட்டும்'' புளங்காகிதமடைந்தவர் போல ராஜ விஸ்வாஸத்துடன் மற்றவர் கூறினார்.

''ஆம் கிடைக்கும் - நிச்சயமாகக் கிடைக்கும். ஏழை மக்களின் கண்ணீரிலே, ரத்தக் குழம்பிலே அவர் பவனி வருவார்'' அவன் வார்த்தைகள் சூடேறிக் கொண்டிருந்தன.

''அப்பா அப்படிப் பேசாதே, அவர் நம் மகாராணி''

''யாருடைய மகாராணி, இந்த நாட்டின் ராமசாமிகளின் - மீனாட்சிகளின் ராணியா? சுதுபண்டாக்களின் - சோமாவதிகளின் மகாராணியா? எங்களை அடக்கி ஆண்ட - ஆளும் கூட்டத்தின் ராணி அவர். மலாயாவிலும், கென்யாவிலும் மனித வேட்டையாடும் சாம்ராஜ்ய தலை வெட்டிகளின் ராணி அவர்.''

''ஏன் நீ அவ்வளவு ஆத்திரப்படுகிறாய்?''

''ஆத்திரமா-எங்களைச் சுரண்டிய, சுரண்டும் பைசாச சாம்ராஜ்யத்தின் முடிசூட்டிய பிரதிநிதி இந்த ராணி. அவர்கள் ஆதிக்கம் இன்று கரைந்த மண்ணாகிறது. சாய்ந்து வரும் சாம்ராஜ்யத்தை, இடித்துவரும் ஏகாதிபத்தியக் கோட்டையை காப்பாற்றவே லட்சோபலட்சம் செலவில் 'பரலோக பவனி' ஆரம்பித்துள்ளார்கள். இங்கும் இவருக்கு தண்டனிட 20 லட்சம் ரூபாவாம். பொலநறுவா 'றெஸ்ட் ஹவுஸில்' ஒரு இரா தங்குவதற்கு 85 ஆயிரம் ரூபா. கக்கூசுக்கு 40 ஆயிரம் ரூபா'' அவன் கொதிப் பேறியவன் போல ஆக்ரோஷத்தோடு பேசிக் கொண்டிருந்தான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த சுப்பனுக்கு தூக்கி வாரிப்போட்டது. ''யாரோ ஒருத்தி ஓர் இரவு தங்க 85 ஆயிரம் ரூபா''. இது அவன் இதயத்தைப் பிளந்தது. ஜுரம் ஏறிய குழந்தைகளின் ஞாபகம் வரவே 'விர்' என்று வெளியேறி நடந்தான். வீட்டைச் சமீபித்ததும் ஏதோ கூக்குரல் அவன் காதுகளில் ஒலித்தது. குடிசையைச் சுற்றி ஒரு சிறு ஜனக் கூட்டம் கூடியிருந்தது. திடீர் திப்பென்று மக்கள் கூட்டத்தை இடித்துத் தள்ளிக் கொண்டு உள்ளே போனான். குழந்தைகள் பிணமாகிக் கிடந்தன. அவன் மனைவி ''சந்திரமதி'' போல தலைவிரி கோலமாக அந்த உயிரற்ற உடலங்களைக் கட்டித்தழுவிக் கதறிக்கொண்டிருந்தாள்.

அவன் சிறிது நேரம் மூச்சுப் பேச்சில்லாது நின்றான். ராணியார் வருகை பற்றி கடையில் நடந்த பேச்சு - இங்கு வைத்திய வசதியில்லாது செத்துக் கிடந்த குஞ்சலங்கள் - அவன் சிந்தனை நீண்ட நேரம் ஸ்தம்பித்து நின்றது.

தொலைவிலுள்ள ஒரு சவக்காட்டில் அந்த இரு உடல்களும் - பெற்று வளர்த்த தங்கங்களின் பிரேதங்களும் தாக்கப்பட்டன. அதன் மீது ஒரு பிடி மண்ணை அள்ளி வீசினான். அவனது - அவனைப்போன்ற மனித ஜெந்துக்களினது அபிலாஷை, வாழ்வெல்லாம் வெறும் பிணக்காடு தான். அந்த மோனத்தை அறிந்தவன் போல அவன் வீடு திரும்பினான்.

வழக்கம்போல எல்லாம் ஓடிக்கொண்டிருந்தது. ராணியார் வருகைக்காக ஆரம்பித்த திருத்த வேலைகள் ஜரூராக நடந்து கொண்டிருந்தன.

அன்று அவன் 'றெஸ்ட் ஹவுசி'ன் கூரையில் ஏறி வேலை செய்து கொண்டிருந்தான். கீழேயிருந்தபடி அதிகாரி ஏதோ அவசர அவசரமாக உத்தரவு பிறப்பித்துக் கொண்டிருந்தார். சிம்ப சொப்பனம் கேட்டது போல நடுங்குற்ற அவன் கால் தவறியது. உடல் புரண்டது. தரையிலே ஒரு பிடி ரத்தம் கொட்டிக் கிடந்தது. அவன் ஆஸ்பத்திரிக்கு மூர்ச்சித்த நிலையில் எடுத்துச் செல்லப்பட்டான்.

இரு வாரங்களுக்குள் ஆஸ்பத்திரியிலி ருந்து சீட்டுக் கிழிந்தது. ஆறு மாதங்களுக்கு எந்த வேலையும் செய்ய முடியாது இடுப்பு ஒடிந்து விட்டிருந்தது.

டாக்டர்கள் பத்திரத்தோடு நஷ்டஈடு கோரி அவன் மனுப்போட்டான். கவலையீனம் காரணம் என்று அதிகாரிகள் தீர்ப்புக் கட்டினர். குடும்பத்துடன் பல நாள்கள் பட்டினி கிடந்த அவன் அதிகாரிகளிடம் கருணைக்காக மன்றாடினான். இறுதியில் ரூபா 250 கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது. அக்கம் பக்கத்து வீட்டாரிடம், லேவா தேவிக்காரரிடம் அவன் பட்ட கடனுக்கு இது 'ஆனைக்கு அவல்' போன்றது.

விட்டுப் போயிருந்தார்கள். உணவிற்கே பணமில்லை. இந்த நிலையில் கொட்டாவிட்ட படியே திண்ணை ஓரத்தில் சாய்நது கிடந்தான். உயர்ந்து நெட்டையாக இருந்த இருவர் வந்தார்கள். அவர்கள் தொழிற் சங்க ஊழியர்கள் அவனுடன் பல மணி நேரம் பேசிவிட்டுப் போனார்கள். நல்ல நஷ்டஈடு கிடைக்கலாம் என்று ஒரு தெம்பு அவன் உச்சளத்தில் அவனை அறியாதே ஏற்பட்டது.

அன்று கடன் கொடுத்தவர்கள் வந்து அவனை பயமுறுத்தி வந்த அந்த ஊழியர்கள் சங்கம் மூலம் நடவடிக்கை எடுத்தார்கள். தொழிலாளிகள் கூட்டம் கூடி தக்க நஷ்டஈடு கொடாவிட்டால் செயலில் இறங்க நேரிடும் என்று அறிவித்தார்கள். இதைக் கேட்ட அரசாங்கம் சீறியது. முக்கிய தொழிலாளிகள் சிலரை நீக்குவதாக அறிவித்தல் செய்தது. இதை எதிர்த்து தொழிலாளர் வேலை நிறுத்தம் ஆரம்பித்தனர். இறுதியில் நிர்வாகம் பணிந்தது. தொழிலாளர்களை நீக்குவதில்லை என்றும், சுப்பனுக்கு ரூபா1000 நஷ்டஈடு கொடுப்பதா கவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

தொழிலாளிகள் அன்று ஊர்வலம் போய்க் கொண்டிருந்தார்கள். வெற்றி விழா நடத்தினார்கள். ஊர்வலம் சுப்பனுடைய குடிசையை நெருங்கிக் கொண்டிருந்தது. ஆர்ப்பரித்து புளங்காகிதமடைந்த சுப்பன் தன்னை சமாளித்தவாறு எழுந்து தெருவோரம் வந்தான். நஷ்டஈடாக கிடைத்த ரூபா 1000 இல் ரூ. 100 ஐ எடுத்துக் கொண்டு ஊர்வலத்தின் முகப்புக்குப் போனான். தலைமை வகித்து வந்து கொண்டிருந்த தலைவரைக் கட்டித் தழுவிக் கொண்டே சங்க நிதிக்கு என்று கூறி ரூபா 100 நோட்டைக் கொடுத்தான். தொழிலாளர்கள் கோஷம் போட்டு ஆரவாரித்தனர்.

''நாம் ஒன்று பட்டால் நமது சக்தியை யாராலும் ஒடுக்க முடியாது. உலகத்தைப் படைத்துக் காக்கும் மகாசக்தி நாம். தூங்கிக் கிடக்கும் உழைப்பாளி வர்க்கம் விழித்தால் ஆளும் வர்க்கம் அழியும். எமது ஒற்றுமையை வளர்க்க வேண்டும்'' என்று தலைவர் கூறினார்.

தொழிலாளர் நெஞ்சில் ஒரு வீறு பீறிட்டது. குருதி ஓட்டத்தில் ஒரு வீராப்பு கரை புரண்டது.

நாட்கள் ஓடின. ராணியார் வருகை ரத்துச் செய்யப்பட்டது. 'அப்பாடா' என்றது அவன் உள்ளம். அன்னிய ராணி வருவதற்கு கொட்டி அளக்கப்படும் லட்சோப லட்சம் ரூபா மிஞ்சிவிடும் என்று அவன் பூரித்தான்.

மாதங்கள் கழிந்தன. ராணியார் வருகைபற்றி மீண்டும் நாடாளும் கூட்டம் அல்லோல கல்லோலம் செய்தது. இந்தச் செய்தி கேட்டு அவன் இருதயம் மீண்டும் குறுகுறுத்தது. ராணியார் வருகையை ரத்து செய்யுமாறு தொழிலாளர் சங்கத்தில் ஒரு தீர்மானமும் கொண்டு வந்தான்.

அன்று ஒருநாள் காலை மணி 10 இருக்கலாம். நல்ல சுகம் இன்னும் இல்லை. படுத்து விட்டபடியே மனைவியுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தான்.

திடீர் தொப்பென்று 'பூட்ஸ்' சப்தம் கேட்டது. கதவை நோக்கி முகத்தைத் திருப்பினான். ஐந்தாறு பொலீஸ் சூரர்கள் 'திபு திபு' என உள்ளே வந்தார்கள்.

'நீதான் சுப்பனா?'

'ஆமா, நான்தான்'

'நீ தொழிற் சங்கத்தில் சேர்ந்திருக்கிறாயா?'

'ஆமா'

இன்னும் சில நாட்களில் மேன்மை தங்கிய மகாராணியார் இங்கு வருகிறார். அபாயகரமான பேர்வழிகளை வெளியேற்றும்படி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.''

''நான் ஒன்றும் அப்படிப்பட்டவனல்ல, நான் அப்பாவி.''

''நீ சங்கத்தில் சேர்ந்துள்ளாய். நீ பயங்கரமானவன்.''

அவன் உதடுகளில் சிரிப்புப் பூத்தது. கேலிச் சிரிப்பு அது. சங்கத்தில் சேர்ந்தது குற்றமா? சங்கம் தானே அவனுக்கு வாழ்வளிக்கது.

அவன் லாரியில் ஏற்றப்பட்டான். கணவனும் ஆசை மனைவியும் சட்டத்தால் பிரிக்கப்பட்டனர். அவள் கண்ணீர்த் துளிகளை சிந்திக்கொண்டே மரக் கட்டை போல விறைத்து நின்று கொண்டிருந்தாள்.

லாரி 'குபீர்' என்று நகரத்தைத் தாண்டி ஓடியது. அவனுக்கு ஊர் பிரஷ்டம், அவன் 'ஆபத்தானவன் - பயங்கரவாதி' 'சூரியன் அஸ்தமியாத சாம்ராஜ்யம்' என்று இறுமாப்புற்ற ஏகாதிபத்தியம் அவனைக் கண்டு கலங்கியது. அந்தத் தொழிலாளியின் - அவன் போன்ற தொழிலாளி வர்க்கத்தினரில் தனது சாவின் முடிவைக் காண்கிறது சாம்ராஜ்யம்.

மயானத்தை லாரி தாண்டிக் கொண்டிருக்கும் போது அவன் வெளியிலே பார்வையை செலுத்தினான். அவனுடைய குழந்தைகள் புதைக்கப்பட்ட குழி அவன் கண்களில் பட்டது. கண்ணீரை 'பொல பொல' எனக் கொட்டினான். அவன் நட்ட ரோஸாச் செடி பூத்து, மலர்க் கொத்துக்கள் தொங்கிக் கொண்டிருந்தன. *(1954)*

*(நன்றி: சுதந்திரன் சிறுகதைகள்)*

---

# ஏமாற்றம் ஏற்பட்டால் அதனைத் தாங்கும் மன உறுதியை நாம் வளர்க்க வேண்டும்

## உணர்த்துகிறது குறிஞ்சிப் பாடல்

ஆசையோடு ஒரு பொருளைத் தேடிச் சென்றவர் அதைப் பெறாவிட்டால் ஆயாசப் படுவார். தேடிச் செல்லும் பொருள் கிடைக்குமா, கிடைக்காதா என்ற ஐயத்துடன் சென்றவர்க்கு அவ்வளவு ஆயாசம் உண்டாகாது. நிச்சயம் நமக்குக் கிடைக்கும் என்று நம்பிச் சென்றவர் தான், அது கிட்டாத போது அதிக துன்பத்திற்கு ஆளாவார். இந்த இயற்கையான இயல்பை இச்சிறிய செய்யுளில் காணலாம்.

அடிக்கடி தன் காதலியைக் கண்டு அளவளாவி ஆனந்தமடையும் தலைவன் ஒருவன். அவன் வழக்கம் போலத் தலைவியைச் சந்திப்பதற்காகக் குறித்த இடத்திற்குப் போனான். நீண்ட நேரம் அவள், வருகைக் காகக் காத்திருந்தான். அவளைக் காணவில்லை. ஒரு நாளாவது அவன் அவ்வளவு நேரம் காத்துக் கிடந்ததேயில்லை. சில சமயங்களில் அவன் வருவதற்கு முன்பே அவள் வந்து காத்திருப்பாள். அல்லது அவன் வந்த நேரத்திலேயே அவளும் வந்து விடுவாள். ஆதலால் அன்று அவன் ஏமாந்து போனான்.

தலைவியைக் காணாமல் ஏமாந்த தலைவன் உள்ளம் சோர்ந்தான். இனி அவளைக் காண முடியுமோ முடியாதோ என்ற ஐயம் அவன் உள்ளத்தைப் பிடித்து உலுக்கியது. 'இந்த இடத்துக்கும் தலைவியின் ஊருக்கும் தொலைதூரம். அவளைக் கண்காணிக்கும் சுற்றத்தா பலர் உண்டு. அவள் செல்லமாக வளர்க்கப்பட்ட பெண். அவளை வெளியில் போகவொட்டாமல் கட்டுக் காவலுடன் வைத்திருக்கக் கூடும். இனி அவளை இந்த இடத்திலே சந்திப்பது அரிதுதான்'. என்று நினைத்தான். அவனுடைய நினைப்பு, கவலை - சொற்களாக வெளிவந்தன. தன் நெஞ்சத்திற்குத் தன் துன்பத்தைத் தானே தெரிவிக்கின்றான். சும்மா தெரிவிக்கவில்லை. ஓர் உதாரணத்துடன் விளக்குகிறான்.

'நெஞ்சே! இனி நீ துன்பத்தால் வாட வேண்டியதுதான். சிறகையிழந்த ஒரு நாரை. அது கிழக்குக் கடலின் கரையிலே அலையோரத்திலே உட்கார்ந்து கொண்டி ருந்தது. அதன் வாயிலே ஒரு மீன் கூடக் கிடைக்கவில்லை. இச்சமயத்தில் அதற்கோர் ஆசை உண்டாயிற்று. மேற்குக் கடற்கரையிலே உள்ள, சேர மன்னனுடைய தொண்டியென்னும் பட்டணத்தின் கடல் துறையில் உள்ள அயிரை மீன் மேல் அதற்கு ஆசை உண்டாயிற்று. முன்பு அம்மீனைத் தின்ற ருசி இப்பொழுது அதன் உள்ளத்தை இழுத்தது. இந்த ஆசை யுடன் அந்த நாரை தன் தலையை மேலே தூக்கி அண்ணாந்து பார்த்ததாம்.

இந்த நாரையைப் போல் தான் ஆனாய் நீயும். நெடுந்தூரத்தில் உள்ளவள். எளிதிலே சந்திக்க முடியாதவள். இத்தகைய தலைவியை அடைவதற்கு எண்ணினாய். அவளைப் பெற முடியாமையால் துன்பத்தை அடைந்தாய். நான் என் எண்ணுகிறேன். நீ துன்பத்திற்குக் காரணமாகிய ஊழ்வினையைக் கொண்டிருக்கிறாய்; என்று சொன்னான். இதில் உள்ள உவமையின் மூலம் சேரனது, தொண்டி நகரத்தின் சிறப்பைக் காண்கிறோம். இதில் உள்ள உவமையும் அழகான உவமை.

*குணகடல் திரையது பறைதபு நாரை*
*திண் தேர்ப் பொறையன் தொண்டி*
*முன்துறை*
*அயிரை ஆர் இரைக்கு அணவந் தாஅங்குச்,*
*சேயள், அரியோள், படர்தி,*
*நோயை, நெஞ்சே! நோய்ப் பா லோயே.*

இதுவோர் குறிஞ்சித் திணைப் பாடலாகும். பாணர் என்னும் பெரும்புலவரால் பாடப்பட்டது. கடுமையான - தீவிரமான நம்பிக்கை, எதிர்பார்ப்பு தோல்வியடையுமானால், அதனை இலேசில் ஜீரணித்துக் கொள்ளும் மனப்பக்குவம் சாதாரண மனித வாழ்க்கையில் பெரும்பாலானோருக்கு அமையாது என்ற அடிப்படைத் தத்துவத்தை படம் பிடித்துக் காட்டுவது போலமையும் இப்பாடலில் ஏமாற்றத்தைச் சுட்டிக்காட்டப் பொருத்தமான உவமானம் கையாளப் பட்டிருப்பது இக்கவிதைக்கு பெரும் மெருகூட்டுவதாக அமைந்து காணப்படுகிறது.



## இலக்கியப் பொழில்

- காப்பியன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களைத் தேடிச் சென்று பணியாற்றுவதற்கு ஏற்ற சந்தர்ப்பம் வழங்குவது கிராம சேவையாளர் பதவி

## 28ஆண்டுகள் ஒரே பிரிவில் பணி யாற்றி மக்கள் மதிப்பைப் பெற்றுள்ள சந்திரராஜாவுடன் ஒரு சந்திப்பு



மக்களை தேடிச் சென்று அவர்களது தேவைகளை அறிந்து சேவையாற்றக்கூடிய ஒரு பதவி கிராம சேவையாளர் பதவி ஆகும்.

அன்று தொட்டு இன்று வரை மக்களால் பெரிதும் மதிக்கப்படும் கௌரவமான பதவியாகும் இது. இப்பதவியை வகிப்போர் அர்ப்பணிப்புடன் சேவையாற்றினால் அது தெய்வீகப் பணியாகவும் அமையும்.

இவ்வாறு தெரிவித்தார் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச பிரிவில் உள்ள ஆனைக்கோட்டை கிராம அலுவலராக கடமையாற்றும் வைரமுத்து சந்திரராஜா

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 28 வருடங்கள் இடமாற்றம் பெறாது தொடர்ச்சியாக மக்களுக்கான அனைத்து சேவைகளையும் மேற்கொண்ட யாழ்.மாவட்டத்தின் சிரேஷ்ட கிராம அலுவலரான வைரமுத்து சந்திரராஜா ஊர் மக்களால் அண்மையில் அவரது தன்னலமற்ற சேவைக்காகப் பாராட்டப்பட்டவர்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில கல்லூரியிலும் பின்னர் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்றுள்ள இவர் கிராம அலுவலர் பதவியில் அமர்ந்து அப்பதவிக்கு மதிப்புச் சேர்த்துள்ளார்.

ஒவ்வொரு நாள் இரவிலும் நான் மக்களுக்கு என்ன பணியை, எவ்வாறு செய்தேன்? அல்லது ஏதாவது பிழையை செய்துவிட்டேனா? என்ற கேள்விகளை எனக்குள்ளே எழுப்பிக் கொள்வேன். அதன் மூலம் என்னால் மக்கள் பணியை செவ்வையாக செய்யமுடிந்துள்ளது என்றார் அவர்.

தமது சேவைகள் பற்றி அவர் கூறியதாவது: சேவைக்காலத்தின் ஆரம்பத்தில் ஆனைக்கோட்டை கிராமம் (காக்கைதீவு, முள்ளி, சோமசுந்தரம் வீதி, சிவன்வீதி, கூழா வடி, சங்கரப்பிள்ளைவீதி என்பவற்றை கொண்டதாக இருந்தது.

கிராம சேவையாளராக பதவியேற்ற காலத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் வீடில் லாத கிராம மக்களுக்கு வீடுகள் வழங்கும் நோக்கில்-

மாவட்ட காணி அதிகாரியாக இருந்த அமரர் அ.பஞ்சலிங்கம் அவர்களின் உதவியுடன் காக்கைதீவில் உள்ள அரசகாணியை பயன்படுத்தி முதற்கட்டமாக 28 குடும்பங்களுக்கு வீடமைத்து கொடுத்து உதவினேன்.

இன்று ஐ.நா. நிறுவனத்தின் நிதிஉதவியுடன் பிரதேச செயலர் ஊடாக மேலும் காக்கைதீவில் 25 குடும்பங்களுக்கு 3லட்சம் ரூபா பெறுமதியான வீடுகளை கட்டிக் கொடுத்துள்ளோம்.

தற்போது 57 வீடுகள் இப்பகுதி மக்க ளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேலும் 33 குடும்பங்களுக்கு வீடமைத்து கொடுப்பதற்கு பிரதேச செயலரிடம் கருத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி மக்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் மூலம் 2001 இல் ஒரு பொதுமண்டபமும் 2008 இல் ஐ.நா. அபிவிருத்தி நிறுவனம் மூலம் இன்னொரு பொது மண்டபமும் ஆக காக்கை தீவு கிராம அபிவிருத் திக்காக இரண்டு பொதுமண்ட பங்கள் மற்றும் மீனவர் தங்குமிடம் மூன்று பொதுக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

### காக்கைதீவு ஒளியேற்றப்பட்டது

காக்கைதீவு நீண்ட காலமாக இருளில் மூழ்கி இருந்தது. இந்தநிலையில் மக்களின் குறையை மகஜர் மூலம் மானிப்பாய் பிரதேச சபைக்கு சமர்ப்பித்து 2005 இல் முழுமையாக வடக்கு-கிழக்கு மாகாண உள்ளு ராட்சி ஆணையாளரின் உத வியை பெற்று 8லட்சம் ரூபா செல வில் முழுமையாக மின்வசதி பெற்று கொடுத்து இன்று அப்பகுதி ஒளியேற்றப்பட்டுள்ளது.

காக்கைதீவு மக்கள் இன்று ஏனைய கிராம மக்கள் போன்று சகல அடிப்படையான வசதிகளையும் பெற்று வாழ்ந்து வருகின் றனர்.

### குடிதண்ணீர் ஏற்பாடு

எனினும் இப்பகுதி மக்களின் குடிதண்ணீர் ஏற்பாடு குடிதண்ணீர் தேவையை நிறைவேற்ற ஒன்றரை ஏக்கர்நிலப்பரப்பில் பாரியகுளம் ஒன்று அமைப்பதற்கு திட்டமிட்டு அதற்கான முன்மொழிவுகளை எமது பகுதி பிரதேச செயலர் திருமதி. ரூபினி வரதலிங்கத்திடம் சமர்ப்பித்துள்ளேன். இக்கிராம மக்களுக்கான ப.நோ.கூ. சங்க கிளை ஒன்று விரைவில் அமைக்கப் பட வேண்டியது அவசியமாகும்.

ஆண்டு - 5 வரையான பாடசாலையொன்று இப்பகுதியில் அமைக்கப்பட வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

இதன் மூலம் காக்கைதீவு மக்களும், அயல் கிராமமுமான நாவாந்துறை, 3ஆம் கட்டை பகுதி மாணவர்களும் நீண்ட தூரம் சென்று கற்கும்நிலை புதிய பாடசாலை உருவாக்கம் மூலம் நிவர்த்தியாகும்.

மேலும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் அமைய சகலரது ஒத்துழைப்பையும் நாடியுள்ளேன். மேற்படி விடயம் தொடர்பாகவும் காக்கைதீவு கிராம அபிவித்தி தொடர்பாகவும் திட்ட முன்மொழிவுகளைப் பிரதேச செயலாருக்கு வழங்கியுள்ளேன்.

### வீட்டு வசதிகள்

எனது கிராம அலுவலர் பிரிவில் 1200 குடும்பங்கள் உள்ளன. வீடில்லாத மக்களுக்கு உலகவங்கி, ஜி.ரி.இசற், ஐ.நா.அபிவிருத்தி நிறுவனம், தேசிய வீடமைப்பு அதிகார சபை ஊடாக முழு நிரந்தர வீடு, அரை நிரந்தர வீடு, மற்றும் விசேட தேவையுள்ளவர்களுக்கான வீட்டு உதவிகளை வழங்கியுள்ளேன். இதனால் 75 வீதமான மக்களின் வீட்டுத் தேவைகள் நிறைவேறியுள்ளன.

எனது காலத்தில் முள்ளிக் கிராமத்தில் உள்ள மக்களுக்கு 3ஆம் கட்டையில் உள்ள சிதம்பரத்துக்காணியை நீதிமன்றம் ஊடாக காணி பெற்று உறுதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 50 குடும்பங்கள் நன்மை அடைந்துள்ளன. பொதுமக்கள் பங்களிப்புடன் நிதி அன்பளிப்பு பெறப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையம் முள்ளியில் கட்டப்பட்டுள்ளது.

### தொழில் பயிற்சி

சமூக சேவைகள் சமூகநலன்துறை அமைச்சின் நிதி உதவியை பெற்று தொழிற் பயிற்சிக் கூடம் அமைக்கப்பட்டு குழாய் பொருத்துதல் பயிற்சி, 'வயறிங்' பயிற்சி என்பன வழங்கப்பட்டுள்ளன. ஆனைக்கோட்டை கிராம இளைஞர்களுக்கு இது பெரு வரப்பிரதாசமாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது - என்றார்.

இன்று கிராம அலுவலர் பிரிவுகளில் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் நியமனம் பெற்று கடமையாற்றுகின்றனர்.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் நியமனம் பெற்ற சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களும் கிராம அலுவலர்களான நாமும் ஒரே கூரையின் கீழ் இருந்து பணியாற்றினால் மக்களுக்கு மெய்யான- அர்ப்பண சேவையை ஆற் றலாம்.

கிராம மட்டத்தில் படித்தவர்கள், படியாதவர்கள், ஏழைகள், பணக்காரர்கள், வசதியுள்ளவர்கள், வசதியற்றவர்கள் என பலர் எம்மை நாடுவர். அவர்கள் ஒவ்வொருவரது தேவையை யும் பொறுப்புடன் உணர்ந்து செயற்பட்டுள்ளேன்.

மக்கள் பணி ஆற்றவேண்டும்; அதுவும் உரிய காலத்தில், உரிய நேரம் அறிந்து ஆற்ற வேண்டும் என்ற உள்ளத்துடன் செயற்பட்டால் இந்தச் சேவையில் ஆத்ம திருப்தியும் - மகிழ்ச்சியும் கொள்ளமுடியும்

அண்மையில் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஊடாக எமது பகுதியில் சிறுவர் பாதுகாப்பு குழு அலு வலகம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பாடசாலைக்குச் செல்லாத மாணவர் விபரம், சிறுவர் துஷ்பிரயோகம் என்பவற்றுக்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு பாடசாலை செல்லாத 25 மாணவர்களை பாடசாலை செல்ல வைத்து கல்வி அபிவிருத்திக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### முன்பள்ளிக்கு புதிய கட்டடம்

ஆனைக்கோட்டை சிவன்வீதியில் உள்ள விநாயகர் முன்பள்ளிக்கு 'சேவாலங்கா' மூலம் புதிய கட்டடம் அமைத்துக் கொடுக்க முயற்சி செய்துள்ளேன். ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம் மைதானம் இன்றி நீண்ட காலமாக இருந்து வந்தது.

இதனை தனியாரிடம் இருந்து 1985 இல் பெற்றுக் கொடுத்துள்ளேன்.

கிராம அலுவலர் ஒருவர் தான் சார்ந்த கிராமத்திற்கு உதவ வேண்டுமானால் அப்பிரதேச செயலக பிரிவின் அனைத்து பிரிவுனுடனும் நல்ல தொடர்புகளை, உறவுகளை வைத்திருக்க வேண்டும். அத்துடன் பிரிவு அதிகாரிகளுடனும் நல்லுறவுகளை வைத்திருந்து செயற்பட்டால் சிறப்பான அபிவிருத்திகளை மேற்கொள்ளலாம்.

இன்று ஆனைக்கோட்டையில் பிரதேச வைத்தியசாலை கட்டப்பட்டு வருகின்றது. இதற்குரிய காணியை எமது பகுதி மக்களே முன்னின்று கொள்வனவு செய்து கொடுத்து அபிவிருத்தி செய்து வருகின்றனர். - என்றார்.

28 வருட சேவையை பூர்த்தி செய்த இவரது வெள்ளி விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. அவர் தங்கப் பதக்கம் அணிவிக்கப்பட்டு பென்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார். ★

**சந்தித்தவர்: செ.ரமேஷ்**

## சுதுமலையில் தேங்காய் திருட்டு

நவாலி,மார்ச்.2

சுதுமலை தெற்குப் பகுதியில் தேங்காய் திருடர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இரவு 9 மணிக்குப் பின்னர் தென்னந் தோட்டங்களில் நுழையும் திருடர்கள் தென்னை மரங்களில் ஏறி அதிலிருக்கும் தேங்காய் குலைகளை வெட்டி வீழ்த்திவிட்டுப் பின்னர் தேங்காய் பதமானவற்றை எடுத்துக் கொண்டு இளநீர் குரும்பை என்பவற்றை விட்டு விட்டுச் செல்கின்றனர்.

இந்த வேளையில் நாய்கள் குரைத்தாலும் அச்சத்தின் காரணமாக யாரும் வெளியே வந்து பார்ப்பதில்லை எனவும், இதனால் தமக்குப் பல ரூபா நஷ்டம் ஏற்படுவதாக தென்னந்தோட்ட சொந்தக்காரர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (203 - 100)


## 31-ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்



அமரர்
கிறிஸ்தோப்பர் கொலின்தேவராஜா
(வருமான மேற்பார்வையாளர், நல்லூர் பிரதேச சபை)

அன்னை மடியில்: 14.02.1953
இறைவன் அடியில்: 01.02.2008

எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாத் துயிலில் இறைவனுக்குள் அடங்கிய
என் துணைவரே! எங்கள் பிதாவே!
எம்மைத் தவிக்க விட்டு நீர் சென்று
31 ஆம் நாள் ஆனது இன்றுபோல் இருக்கிறதே
பார்புகழ் நாம் வாழப் பண்புடனே வளர்த்தீர்கள்!
சிறப்புடன் நாம் வாழ சேர்ந்தெம்மோடு வாழாது
எம்மையெல்லாம் தவிக்க விட்டு இடை நடுவில் சென்றீர்களே!

கடந்த 01.02.2008 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது இதயபூர்வ நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (02.03.2008) அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"திருப்பதி",
கே.கே.எஸ்.றோட், இணுவில்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
கந்தையா வல்லிபுரம்
(தம்பலகாமம் வர்த்தகர்)

தோற்றம் 14★03★1918
மறைவு 02★02★2008

02.02.2008 ஏகாதசி திதி அன்று இறைபதம் அடைந்த எமது அன்புக் குடும்பத் தலைவரின் இறுதிக் கிரிகைகளில் பங்குபற்றி ஆறுதல் கூறியோருக்கும் அஞ்சலி செலுத்தியோருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாளை (03.03.2008) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

"பார்வதி பூங்கா",
திக்கம், அல்வாய்.

குடும்பத்தினர் சார்பில்:
வ.வர்ணகுலசிங்கம் (மகன்)

## ஓராண்டு நினைவஞ்சலி ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்
கணபதிப்பிள்ளை தங்கராசா
(முன்னாள் சிரேஸ்ட மேற்பார்வையாளர், சிறைச்சாலை).
திதி: 02.03.2008



அமரர்
வள்ளியம்மாள் தங்கராசா

| | | |
|---|---|---|
| 03.03.1925 | பிறப்பு | 04.12.1939 |
| 13.03.2007 | இறப்பு | 30.01.2006 |

*மலர்ந்த முகத்துடன் மாசற்ற நெஞ்சுடன் பாசத்தின் உறைவிடமாய்*
*பார்போற்ற வாழ்ந்தீர்களே! நீங்கள்தான் இன்றில்லை எம்முடனே*
*காலம் மறைந்தாலும் கவலைகள் மறையவில்லை ஆண்டுகள் எத்தனை நகர்ந்தாலும்*
*உங்கள் நினைவுகள் நீங்காது. எங்கள் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து*
*வீரபத்திரர் அடியில் உங்கள் இருவரினதும் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.*

அராலி வடக்கு, செட்டியார் மடம், வட்டுக்கோட்டை.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் தமக்கு அப்பம் தருமாறு கேட்க கல்லைத் தந்த சிங்களத் தலைமைகள்...!

இலங்கை சுதந்திரம் அடைந்து அறுபது ஆண்டுகள் கடந்தோடிவிட்டன. 1948ஆம் ஆண்டில் பதவியிலிருந்த ஐ.தே.கட்சியின் மொழிக் கொள்கை சிங்களமும் தமிழும் இலங்கையின் அரச கரும மொழிகளாக வேண்டும் என்றே இருந்தது. இதன் பொருட்டு அரசாங்க மொழிகள் திணைக்களமும் நிறுவப்பட்டு சிங்களத்தையும் தமிழையும் உத்தியோக மொழிகள் ஆக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கும் தமிழுக்கும் அரசாங்க நிர்வாகம் மாற வேண்டுமாயிருந்தால் அதன் பொருட்டு சிங்கள, தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்களின் தேவை பெரிதும் உணரப்பட்டது. 1951ஆம் ஆண்டு வாக்கில் அப்பொழுதிருந்த அரசாங்கம் பெரும் பணச்செலவில் சிங்கள, தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்களுக்கான பயிற்சி வகுப்புகளையும் ஆரம்பித்தது. இப்பயிற்சி நெறிகளை ஊக்குவிக்கும் பொருட்டுப் பயிற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புத் தொகைகளும் மாதாமாதம் வழங்கப்பட்டன. இது ஒருபுறம் இருக்க சோல்பரி யாப்பின் 29 ஆவது சரத்து சுதந்திர இலங்கையின் சோல்பரி அரசியல் யாப்பின் இருபத்தொன்பதாவது சரத்து சிறுபான்மை இன மக்களைப் பற்றியது. இந்த சரத்துப் பற்றிய தமது ஐயப்பாடுகளை அவ்வப்போது தமிழ்த் தலைவர்களும் கொக்குவில் இந்துவின் புகழ்பூத்த அதிபர்களுள் ஒருவராக விளங்கிய ஹண்டி பேரின்பநாயகம் போன்ற பெரும் கல்விமான்களும் வெளியிட்டு வந்தனர். இவ்வேளையில்தான் இலங்கை அரசியலில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன.

### மிகப்பெரும் துரதிஷ்டம்

1947ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் பிரதமராகப் பதவிக்கு வந்த டி.எஸ்.சேனநாயக்க அவர்களது மந்திரி சபையில் உள்ளூராட்சி அமைச்சராகப் பதவி வகித்தவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்க அவர்கள். இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவராக விளங்கியவர். மிகச் சிறந்த உச்சமான பேச்சாளர். அரசியலிலும் மக்களிடத்திலும் அபரிமிதமான செல்வாக்கு அன்று இவருக்கிருந்தது.

தமிழ்பேசும் மக்களைப் பொறுத்த அளவில் அவர்களைப் பிடித்த மிகப் பெரும் துருதிருஷ்டம் பண்டாரநாயக்க ஐ.தே. கட்சியிலிருந்து ஓரங்கட்டப்பட்டமையே ஆகும்.

### டட்லி விலக
### சேர் ஜோன் பிரதமரானார்

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர், தமது பதவிக்காலம் முடிவுற முன்னர் குதிரையால் விழுந்து மரணத்தைத் தழுவ அவரது மகன் டட்லி சேனநாயக்க பிரதமரானார். 1952 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலும் ஐ.தே.கட்சியினரே வெற்றியடைய மீண்டும் டட்லி சேனநாயக்க அவர்களே பிரதமரானார்கள். டட்லி அவர்கள் பதவிக்கு வந்த கையோடு அரசாங்கம் அரிசி, சீனி, மண்ணெண்ணெய் ஆகியவற்றின் மானிய விலையில் சிறிது உயர்வை ஏற்படுத்தியது. இந்த விலை உயர்வுகளை எதிர்த்து அன்று பலமான நிலையில் இருந்த சமசமாசக் கட்சி 1953 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 12ஆம் திகதி பரந்த ஹர்த்தால் போராட்டம் ஒன்றை நடத்தியது. நிலைமை கட்டுக்கடங்காமல் போவதைச் சமாளிப்பதற்காக அரசாங்கம் இராணுவத்தை அழைத்தது. இந்த ஹர்த்தால் அசம்பாவிதங்களின்போது பெரியதம்பி என்ற நாடாளுமன்ற சிரேஷ்ட உத்தியோகஸ்தர் ஒருவரும் இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் உயிரிழக்க நேரிட்டது. இக் ஹர்த்தால் சம்பவங்களினால் மிகவும் மணம் உடைந்து நொந்து போனவரான டட்லி சேனநாயக்க அவர்கள் தமது பதவியைத் துறக்க சேர் ஜோன் கொத்தலாவலை அவர்கள் பிரதமரானார்.

### சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உதயம்

டி.எஸ்.சேனநாயக்க அவர்களின் மறைவுக்கும் 1956ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலுக்கும் இடைப்பட்ட காலம் இலங்கைச் சரித்திரத்தில் மிகமிக முக்கியமான ஒருகாலம் எனலாம். ஐ.தே.கட்சியினரால் ஓரங் கட்டப்பட்ட எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்றைத் தாபித்துக் கொண் டார். இது இவ்விதமிருக்க பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை அவர்களுடைய செய்தி ஒன்றை இவ்வேளையில் பார்ப்பது அவசியமானதாகும்.

## பின்நோக்கிய பார்வை இது

### சேர் ஜோன் அளித்த வாக்குறுதி

பிரதமர் பதவி ஏற்றதைத் தொடர்ந்து சேர் ஜோன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். கொக்குவில் இந்துக் கல்லூரியில் தமிழ்த் தலைவர்களால் அவருக்கு மகத்தான வரவேற்பொன்று அளிக்கப்பட்டது. அவ்வேளையில் ஹண்டி பேரின்பநாயகம் போன்ற தமிழ்த் தலைவர்கள், சோல்பரி அரசியல் யாப்பின் இருபத்தொன்பதாவது சரத்துப் பற்றிய தமது ஐயப்பாடுகளையும் கவலைகளையும் வெளியிட்டனர். அதற்குப் பதிலளித்துப் பேசிய சேர் ஜோன் கொத்தலாவலை, தமிழ்மக்கள் ஒன்றுக்கும் பயப்படத் தேவை இல்லை என்றும் அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுமென்றும் சிங்களத்துடன் தமிழுக்குச் சமஅந்தஸ்து அளிக்கப்படும் என்றும் வாக்குறுதி அளித்தார். அது ஐ.தே.கவின் ஆரம்பகாலக் கொள்கையாகவும் இருந்தது. நெடுந்தீவிற்குச் சென்றபோது அங்கும் கிரீடம் சூட்டி அவருக்குப் பெரும் கௌரவமளிக்கப்பட்டது.

### போர்க் கொடி

சேர் ஜோன் கொத்தலாவலை யாழ்ப்பாணத்தில் அளித்த வாக்குறுதிகளுக்கு எதிராக உடனடியாக கொழும்பில் எதிர்ப்புக் கிளம்பியது. அப்பொழுது கொழும்பில் பிரபல பத்திரிகை நிறுவனம் ஒன்றில் நான் முழுநேர அலுவலகப் பத்திரிகையாளனாகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அதிபராக அன்று விளங்கிய எல்.எச்.மேத்தானந்தா, சேர் ஜோன் அவர்களது வாக்குறுதிகளுக்கு எதிராகப் பெரும் போர்க் கொடிதூக்கினார். இன்று நான் ஞாபகப்படுத்திப் பார்க்கிறேன்.

## கொத்தலாவலையின் கொக்குவில் வாக்குறுதி கொழும்பில் இனவெறியை மூட்டியது

கொத்தலாவலையின் வாக்குறுதி கொழும்பில் தெற்கில் இனக்குரோதமும் இன வெறியும் கொழுந்து விட்டு எரிய வைத்தது.

சிங்கள, தமிழ் மொழிப் பிரச்சினை நாடு முழுவதும் சிறிது சிறிதாகப் பலமாகச் சூடு பிடிக்கத் தொடங்கியது. இந்தச் சூழ்நிலையைத் தாம் அதிகாரத்தைக் கைப்பற்றவதற்கு பண்டாரநாயக்க சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். தமது கட்சி அடுத்த பொதுத் தேர்தலில் பதவிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும் அரச கரும மொழியாகும் என அறிவித்தார்.

இந்த அறிவிப்பானது பௌத்த குருமார்கள், சிங்கள ஆயுள்வேத வைத்தியர்கள், சிங்கள ஆசிரியர்கள் எனச் சிங்களப் பொது மக்களையும் இலட்சோப இலட்சமாக அவரின் கீழ் அணிதிரள வைத்தது.

1956ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் பண்டாரநாயக்காவின் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி அமோக வெற்றியீட்டியிருந்தது. இந்தத் தோ தலில் ஐ.தே.கவால் எட்டே எட்டு ஆசனங்களை மட்டுமே பெறமுடிந்தது.

முதன்முதலில் தமிழ் அரசியல் சக்தியாக தந்தை செல்வா தலைமையில் பத்து ஆசனங்களுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சி தலை நிமிர்ந்து நின்றதும் இவ்வேளையில் தான் இவை எல்லாம் இன்று வரலாற்று நிகழ்வுகளாகிவிட்டன.

### 1956 ஜூன் மாதத்தில்

1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சிங்களம் மட்டும் மசோதா கொண்டு வரப்பட்டதும் அன்றைய தினம் இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் காலிமுகத்திடலில் மாபெரும் சத்தியாக்கிரக போராட்டம் ஒன்றை நடத்தியமையும் என் மனதில் பதிந்த விடயங்களாகிவிட்டன. அன்று நடைபெற்ற சம்பவங்களை அரசியல் ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் என்னால் மறக்க முடியவில்லை.

தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரக செய்திகளைத் திரட்டுவதற்காக காலி முகத்திடலுக்குச் சென்ற நான் பட்டைக் கல் அடிபட்டு மண்டை உடையாமல் தப்பியது தெய்வச் செயலென்பேன். என்னுடன் அங்கு வந்திருந்த எனது அலுவலகப் படப் பிடிப்பாளர் வின்சென் வீரசேகர கல்வீச்சுச் சம்பவங்கள் தாறுமாறாக அதிகரிக்கவே என்னைத் தனது பாதுகாப்புடன் பத்திரமாக எனது அலுவலகத்திற்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டார். அந்த நல்ல நண்பரை இன்றும் நினைவு கூருகிறேன்.

### ஆறு தசாப்த காலச் சம்பவங்கள்

சுதந்திர இலங்கையின் வரலாறறில் இலங்கைத் தமிழ்பேசும் மக்களது உரிமைகள் தொடர்பில் பல உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. ஆனால் எவையும் நிறைவேற்றப்படவில்லை. 1957ஆம் ஆண்டு செய்த கொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், 1965 ஆம் ஆண்டு முடிக்கப்பட்ட டட்லி - செல்வா ஒப்பந்தம், அதிபர் ஆர். பிரேமதாஸ காலத்திலும் அதிபர் திருமதி சந்திரிகா பண்டாரநாயகா காலத்திலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் அனைத்துமே தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தளவில் பெரிய ஏமாற்றத்தில் முடிந்தன.

கடைசியாக நோர்வே அனுசரணையுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையும் கைவிடப்பட்டுவிட்டது.

முதலில் பிராந்திய சபைகளைத் தருவதாகக் கூறினார்கள். பின்னர் மாவட்ட சபை என்றார்கள். அடுத்து மாகாண சபை நிர்வாகம் என்ற முறைவந்தது. வடக்குக் கிழக்கைப் பொறுத்த வரையில் காலத்துக்குக் காலம் அனைத்துமே உருப்படியாகச் செயற்பட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

### அப்பத்தைக் கேட்க
### கல்லைத் தருகிறார்கள்

இன்றெல்லாம் தந்தை செல்வா அவர்களை நான் அடிக்கடி நினைவு கூருவதுண்டு. அவர் உடலால் தான் மிகவும் மெலிந்த ஒரு மனிதர். ஆனால் உள்ளத்தால் இரும்புபோன்ற உறுதி அவருடையது. அவர் நேசித்த பத்திரிகையாளர்களுள் யானும் ஒருவன். பல பிரத்தியேக தனித்துவமான செவ்விகளைத் தந்தை அவர்கள் எனக்களித்ததுண்டு. சரியாக ஐம்பது வருடங்களுக்கு முன்னர் எனக்களித்த நேர்காணல் ஒன்றில் அவர் கூறியது யாதெனில் "நாங்கள் அப்பத்தைக் கேட்கிறோம். அவர்கள் கல்லைத் தருகிறார்கள்." என்பதாகும்.

அந்தக் கதையே மஹிந்த அறிவித்திருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தின் சில சரத்துக்களை மட்டும் நிறைவேற்றுவது என்ற புதிய கதைவிடும் கட்டமாகும். பெரியவர் அவர்கள் இன்றிருந்தால் என்ன கூறுவார் என்பதை உதயன் வாசகர்களது ஊகத்திற்கு விட்டு விடுகிறேன்.



*

- செல்லப்பா நடராசா -

---

## ஐரோப்பாவில் முதன்முதல் காலபதித்த யாழ்ப்பாணத்தவர்

தோமஸ் மோர்டிமர்(Thomas mortimer) ஐரோப்பாவுக்கு விஜயம் செய்த முதலாவது யாழ்ப்பாணத்தவர் ஆவார்.

இலண்டன், சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, ஹொலண்ட், டென்மார்க் எல்லாம் இப்போது யாழ்ப்பாணத்தவர்களுக்குப் பக்கத்து ஊர் மாதிரி.

மகள் வரச்சொன்னாள், மகன் கூப்பிட்டான், மகளின் பிள்ளைப்பேறு பார்க்க, பேரப்பிள்ளையைப் பார்ப்பதற்கு, நண்பர்களின் அழைப்பின் பெயரில், கோயிலுக்கு நிதி சேகரிக்க என்றெல்லாம் இப்போது யாழ்ப்பாணத்தவர்கள் நினைத்தவுடன் வெளிநாடு சென்று வருகின்றனர்.


சில படித்தவர்கள், ஒழுங்காக ஆங்கிலம் எழுதத் தெரியாதவர்களெல்லாம் எப்படி குடிவரவு, குடியகல்வு அனுமதிப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து வெளிநாடு சென்று வருகின்றனர் என வாயைப் பிளக்கின்றனர். ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் கனடாவிலும் பல யாழ்ப்பாணத்தவர்கள் உள்ளூராட்சி உறுப்பினர்களாகவும் பதவி வகிக்கின்றனர். யாழ்ப்பாணத்தின் தற்போதைய சனத்தொகையை விட ஐரோப்பிய நாடுகளில் வாழும் யாழ்ப்பாணத்தவர்களின் சனத்தொகை அதிகம். ஐரோப்பிய மண்ணில் காலடி பதித்த முதலாவது யாழ்ப்பாணத்தவர் என்ற பெருமையை தோமீஸ் மோர்டிமர் என்ற உபதேசியாரே (Catheitist) பெறு கின்றார். இவர் cms என அழைக்கப்படும் Christian Missionary Society என்ற அங்கிலிக்கன் திருச்சபையுடன் இணைந்த சபையைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய அட்லி (Adley) என்ற பாதிரியாருடன் 1841 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இங்கிலாந்துக்குச் சென்று திரும்பினார். ஐரோப்பாவுக்குள் கால் பதித்த முதலாவது யாழ்ப்பாணத்தவர் இவரே. இவரது சொந்தப் பெயர் என்னவென்று தெரியவில்லை.

இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!

- தாண்டவன் -

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 01




அனுப்புபவர் பெயர்:..................................

விலாசம்:..................................

கையொப்பம்:..................................

### மேலிருந்து கீழ்

1. அகங்காரம்
2. நாளின் ஆரம்ப வேளையை இப்படிச் சொல்வார்கள்.
3. வாழ்க்கையின் ஆரம்பம் இப்படித்தான் தொடங்குகிறது.
4. அன்புடையாரின் இதுவும் பிறர்க்கு உரியதே.
6. சிலர் இதை அடிப்பார்கள்.
7. சர்ப்பத்தைக் கட்டுப்படுத்தக் கையாளும் கருவி.
9. கறியில் சேர்ப்பது. வயிற்றில் வாயுக்குணங்களைத் தவிர்ப்பது.
10. துஷ்யந்தன் காதலி.
11. மக்கள் கூட்டம்
13. இந்துப் பெண்களின் மங்கலப் பொருளொன்று.
14. மாமிசம் விற்கும் கடை
15. [illegible]
18. [illegible] கூடாது. ஆனால் எவராலும் இதனைச் சேர்க்காமல் இருக்கவும் முடியாது.
19. ஒருவகை உணவு. ஆனந்தப் பரவசநிலையும் இப்படிச் சொல்லலாம்.

### இடமிருந்து வலம்

1. சுதந்திர இந்தியாவின் தந்தை. அவரை இப்படித்தான் அழைப்பார்கள்.
5. பர்வதம்.
6. பாண்டவரில் மூத்தவன்
8. இந்துக்களின் ஒரு விரத நாள்.
11. ஊற்றிலிருந்து நீர் இப்படித்தான் பாயும்.
12. சிலர் தலையில் இருப்பது.
13. இது இதையே கெடுக்கும்.
14. முற்காலத்தில் மரண தண்டனைக்கு இதில் ஏற்றுவார்கள்.
16. சாந்த குணமுடையோன்.
17. மின்குமிழின் ஒளிரும் இழை இதனால் செய்யப்பட்டது.
19. அறுபத்து நான்கு வகையுண்டு.
20. மந்த நிலை.
21. பரீட்சைகளில் பெறுபேறுகளை இந்தக் கணக்கில் தருவார்கள்.
22. எய்தவன் இருக்க இதை நோவதில் என்ன பயன்?

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற் சிலம்பம் குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூ.200/=, ரூ100/=, ரூ.75/= பணம் பரிசில்கள் வழங்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

சொற்சிலம்பம் - போட்டி இல : 1
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு (12.03.2008) முன்னர் கிடைக் கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. வெற்றி பெற்றோர் விவரம் அதற்கடுத்த வாரத்தில் பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழா நாயகனை வாழ்த்துகின்றோம்

சாவகச்சேரி நகர் கிராம அலுவலர்

**திருவாளர் வை.இராசரத்தினம்**
அவர்கள்



ஓய்வுபெறுவதையிட்டு இன்று (02.03.2008) ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறும் பாராட்டு விழாவில் எம் இனிய வாழ்த்துகளை விழா நாயகனுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

S.மணிவர்ணன் குடும்பத்தினர், நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி/551657)
S.செல்வராஜா குடும்பத்தினர், கென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி.


## "நெருக்கமான வாயில் வழியாக நுழைய வருந்தி முயலுங்கள்"

நாம் வாழும் இவ்வுலகில் நமக்கென ஒரு நிலையான நகரம் இல்லை. பயணிகளாகவே இருக்கிறோம். பயணம் என்றால் பாதை வேண்டும். ஆனால் பாதைகளோ பல விதமானவை. அவற்றுள் எத்தகைய பாதைகள் எமக்கு உண்மை வாழ்வைக் காட்டக் கூடியவை.

இயேசுவே எமது வழி (யோவான் 14:6) அவரால் அன்றி நாம் ஞான வாழ்வுக்குள் செல்லமுடியாது. ஞான வாழ்வை நோக்கி நாம் செல்லும்போது கரடுமுரடான, கல்லும், சேற்றுக்குழிகளும், முட்புதரும் நிறைந்த கடினமான பாதைகளினூடாகப் பயணிப்பதன் மூலமாகத்தான் அவ்வாழ்வின் குறித்த இடத்தை அடையமுடியும் என்பது எமது நம்பிக்கை. கான மிசைக்கும் குயில்களோ, குளிர்மை தரும் சோலைகளோ இப்பாதையில் இல்லாமலிருக்கலாம். சோர்வும், களைப்பும், வேதனையும், சோதனையும் நிறைந்த கசப்பான அனுப வங்கள்தான் இப்பாதையில் ஏற்படக்கூடியது. ஆனால் அதுவே எமக்கு வாழ்வைக் காட்டும் பாதை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.




உலகப் பார்வையிலே பாதைகள் எவ்வளவு எளிதாக இருக்கிறதோ அவ்வளவு விரைவாக குறிக்கோளை எட்ட முடியும். ஆனால் ஞான வாழ்வில் பாதை எத்துணை கடினமானதாக இருக்கிறதோ அத்துணை எளிதில் இறைவனை அடையலாம். மேடு பள்ளமான கடின பாதையாக இருப்பினும் இப்பாதையின் ஓரமாக இறையருள், மறை போதகம் ஆகிய மின் விளக்குகள் வழிகாட்டி நின்று இருளையகற்றுகின்றன. ''என்னைப் பின்பற்றுபவன் இருளில் நடவான்'' (யோவான் 8:12)

எளிதான வாழ்வை விரும்பி விரிந்த வழி செல்வோர் பலர். தவவாழ்வை மேற்கொண்டு கிறிஸ்துவின் நெருக்கமான வழி செல்வோர் சிலர். இவர்களே மீட்படைவர். இவற்றின் மத்தியில் எமது வாழ்க்கைப் பாதை எத்தகையது? என்று நாம் எம்மையே கேட்டுப் பார்க்கவேண்டும். விடை பல கோணங்களில் வரினும், செபமும் தவமும் நிறைந்த பாதையூடாகப் பயணிக்கும்போதுதான் நாம் உண்மை வாழ்வை நோக்கி, நித்திய ஒளியை நோக்கி நடந்து சென்று கிறிஸ்துவில் முழுமையடைய முடியும் என்பது எமக்குத் தெளிவாகிறது.

செப, தவ வாழ்வில் நாம் பயணிக் வேண்டுமெனில் எமது அளவு கடந்த ஆசைகளையும் விருப்பங்களையும் அடக்கியாள்வது மட்டுமல்லாது, இயற்கைக்கு இசைவான இச்சைகளை ஒறுத்து, எமது பலவீனங்களில் பக்குவப்பட்டு, சோதனைகளைக் கண்டு சோர்ந்துவிடாது, தீமையை ஒதுக்கி நன்மையை நோக்கி நாம் பயணிக்கவேண்டும். உண்ணாமையால் உடலை வாட்டலாம், கசையடியால் உடலைத் துன்புறுத்தலாம், முட்கள் மேல் படுத்து உடம்பை வேதனைப்படுத்தலாம், கடுங்குளிரில், குளிர்நீரில் நெடுநேரம் நின்று தவம் புரியலாம். ஆனால் இவற்றை விட எமது இயல்பான இச்சைகளை அடக்கி ஒடுக்கி ஒறுத்து வாழ்ந்தால் அதுவே பெருந்தவமாகும்.

யா.ரமேஸ் அ.ம.தி.


## கடை இடமாற்றம்

இதுவரையிலும் இல.357, மணிக்கூட்டு வீதியில் இயங்கி வந்த **கணபதி மோட்டோஸ்** எனும் வியாபார நிலையம் இடமாற்றப்பட்டு இல.351, மணிக்கூட்டு வீதி எனும் முகவரியில் இயங்கும் என சகல வாடிக்கையாளர்களிற்கும் அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(71597) - உரிமையாளர்.


## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்2

தென்மராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியைகளுக் கான கலந்துரை யாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடை பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(202-207)


## விரும்பினால் விண்ணப்பியுங்கள்!

தினமும் வேலைக்கு வரலாம் ஆனால் இது உத்தியோகமில்லை!
ஆதீத லாபம் பெறலாம் ஆனால் இது வியாபாரமும் இல்லை!
விருதுகளை வென்றிடுவீர் ஆனால் இது ஒரு கல்லூரியுமில்லை!
பல நாடுகளை பார்த்து வரலாம் அதற்கு நீங்கள் செலவிடத் தேவையில்லை!
சமுதாயத்திற்கும் சேவை செய்திடலாம் ஆனால் இது ஆன்மீக வழியுமில்லை!

ஆக மொத்தம் முயற்சியாளர்களே உங்கள் வெற்றிக்கு இது ஓர் இனிய சந்தர்ப்பம், மறவாதீர்கள்.

**"முயன்றுதான் பாருங்களேன்"**

உங்கள் விண்ணப்பத்துடன் கூடிய சுயவிவரக் கோவையை எதிர்வரும் 07.03.2008இற்கு முன்னதாக அனுப்பவேண்டிய முகவரி:
**3069, மே/பா உதயன்.** (71598)


## வலி.தெற்குப் பிரதேசத்தில் கலை, இலக்கியப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்2

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் கலை, இலக்கியப் போட்டிக்கு வலி.தெற்குப் (உடுவில்) பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

கவிதை, கட்டுரை, சிறுகதை, பாடலாக்கம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் தமது ஆக்கங்களை 'பிரதேச செயலகம், வலி.தெற்கு, உடுவில்' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் ரி.மஞ்சுளாதேவி கேட்டுள்ளார். (202)


## அறிவித்தல்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

### பொதுக்கூட்டம்

எதிர்வரும் 16.03.2008 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வருடாந்தப் பொதுக்கூட்டம் அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அனைத்துப் பெற்றோர்களையும் தவறாது இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர். செயலாளர்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
(சி/551658) மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.


## மரண அறிவித்தல்கள்

### பரமசிவம் அமலன்



காழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசிவம் அமலன் 25.02.2008 திங்கட்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் பரமசிவம் - மாணிக்கவல்லி தம்பதியரின் (இந்தியா) அன்பு மகனும் ஹேமலதாவின் (சுவிஸ்) சகோதரனும் ஜெயபாலனின் (சுவிஸ்) மைத்துனரும் நிவராம், சிவராம் ஆகியோரின் மாமாவும் ஸ்ரீதரன் - இந்திராணி (கொழும்பு), சரஸ்வதி - சிவப்பிரகாசம் (கொழும்புத் துறை), சிவயோகம் - கதிர்காமநாதன் (கொழும்பு) ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற அமரேசன் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் (திருநெல்வேலி) மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2008) திங்கட்கிழமை சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்தியா தொ.பே.இல.: 0091431-2351389
சுவிஸ் தொ.பே.இல.: 0041326724502
தகவல்: அமரேசன் பரமேஸ்வரி (மாமி) கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/551650)

### நடராசா தங்கராசா
(சட்டத்தரணி, JPUM)



மேலைப்புலோலியைப் பிறப்பிடமாகவும் தென் புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தங்கராசா (சட்டத்தரணி JPUM மும், சத்தியப்பிரமாண ஆணையாளரும்) நேற்று (01.03.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் தமிழினி (லண்டன்), யாழினி (பிராந்திய சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்), மயூரன் (யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவனும் UNOPS நிறுவன உத்தியோகத்தரும்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தமிழ்ச்செல்வனின் (இத்தாலி) அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (01.03.2008) சனிக்கிழமை ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரையடி, புலோலி.
தொ.பே.: 021 2263079 (சி/551659) தகவல்: குடும்பத்தினர்.


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரசாங்கத்தில் கடமையாற்றும் பூச நட்சத்திரம், 4ஆம் பாதம், கிரகபாவம் 19, உயரம் 5' 6'', 30 வயதுடைய பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

குடும்ப விவரம், ஜாதகக் குறிப்புடன் தொடர்பு: விளம்பர இல. 3070, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (71596)

## தவறிவிட்டது

பரமானந்தன் ஜெரால்ட் சந்திரகாந்தன் என்பவரின் தே.அ.அ. (741342022V), விடே அ.அ., மோட்டார் வாகன இராணுவ அனுமதிப் பத்திரம் என்பன ஆனைக்கோட்டைக்கும் நவாலிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஜீவா ஸ்ரோஸ், நவாலி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (71592)

## தவறிவிட்டது

இராமலிங்கம் வேதலிங்கம் என்பவரின் தேசிய அ.அட்டை (553154403V), வேதலிங்கம் ஜெயசந்திரா என்பவரின் தேசிய அ.அட்டை (667203210V) என்பன பருத்தித்துறைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள். இ.வேதலிங்கம், குடத்தனை வடக்கு, குடத்தனை என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (சி/551661)

## தேவை

புத்தகசாலை ஒன்றுக்கு பெண்பிள்ளை உடன் தேவை. அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் இன்றே நேரில் வரவும்.

**சுஜன் என்டபிரைஸ்,**
ரிச்சார்ட் பாடசாலை அலுவலக உபகரணங்கள் விற்பனை நிலையம்,
இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி.
T.P.: 021 2226678, 0777550886 (71593)
Richard Quality Stationers

## பந்தல் விற்பனைக்குண்டு

சொக்கட்டான் பந்தல், அதனுடன் கூடிய சமையல் பாத்திரங்கள், எவர்சில்வர் பொருள்கள் அனைத்தும் விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
சி.ஞானசேகரம்,
புலோலி வீதி, ... (பெற்றோல் செட் அருகில்)
T.P.: 077 9788752, 060 221 2973 (71577)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உப அதிபர்

**திரு.அ.அ.வி.மரியநாயகம்**
அவர்களின் அன்புத் தந்தை

**மரியாம்பிள்ளை அல்போன்ஸ்**

அவர்கள் 01.03.2008இல் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகிறோம். இவரையிழந்து தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஆத்மா சாந்தியடைவதாக!

யா/கலட்டி றோ.க.த.க. பாடசாலை, பருத்தித்துறை. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள். (சி/551662)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் 30ஆம் நாள் நினைவஞ்சலியும்

மலர்வு 09 09 1929 உதிர்வு 02 02 2008



**திருமதி சரஸ்வதி மகாதேவன்பிள்ளை**

கடந்த 02.02.2008 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் நினைவாக இன்று (02.03.2008) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளும் நாளை (03.03.2008) திங்கட்கிழமை நடைபெறும் ஆத்மசாந்தி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காமாட்சி அம்மன் வீதி, வியாபாரிமூலை, பருத்தித்துறை. (சி/551655) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான, இலக்கியப் புலமை மிளிரும் சுஜாதாவின் சனரஞ்சகமும் வசீகரமும் நிறைந்த அற்புதப் படைப்புகள்



பிரபல தமிழ் எழுத்தாளர் சுஜாதா அண்மையில் இயற்கை எய்தினார். சுஜாதா என்ற பெண் பெயருக்குள் மறைந்து படைப்பாக்கம் செய்த அவரது இயற்பெயர் ரங்கராஜன் என்பதாகும். இலத்திரனியல் துறையில் பொறியியலாளரான அவர் பாரத் இலத்திரனியல் நிறுவனத்தின் மேலாளராக இருந்து ஓய்வு பெற்றவர். 1953 இல் சிவாஜி வார இதழில் எழுதிய சிறுகதையுடன் அவரது இலக்கியப் பிரவேசம் நிகழ்ந்தது. தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட நாவல்களையும், இருநூற்றுக்கும் அதிகமான சிறுகதைகளையும், நாடகங்கள், கட்டுரைகள், கேள்வி-பதில், பத்தி எழுத்துக்கள் எனப் பலவற்றையும் எழுதித் தள்ளி எழுத்துலக ஜாம்பவானாக அவர் திகழ்ந்தார்.

அவரிடம் உள்ள பன்முகத் தேடலும் பார்வையும் அவரைப் பிரபல படைப்பாளியாக மாற்றின. அதேவேளை, சனரஞ்சக எழுத்துக்களால் அடிமட்ட வாசகர்களையும் கவரும் வகையில் எழுதினார். அறிவியல் புனைகதைகள் பலவற்றை எழுதிய அவர் திருக்குறளையும், சங்க இலக்கியத்தையும், கம்பராமாயணத்தையும் சைவத் திருமுறைகளைப் யும் பற்றியும் எழுதினார். நடைமுறை வாழ்வோடும், அறிவியலோடும் பழந்தமிழ் இலக்கியக் கருத்துக்களை ஒப்புமை கண்டு எழுதவும் அவர் தவறவில்லை.

சனரஞ்சகமாக அவர் எழுதிய நாவல்களில் நிறமற்ற வானவில், விரும்பிச் சொன்ன பொய்கள், நடனமலர், கனவுத் தொழிற்சாலை, வடிவங்கள், பிரிவோம் சந்திப்போம் என்பவை குறிப்பிடத்தக்கவை. கனவுத்தொழிற்சாலை என்பது சினிமாதொழில் சார்ந்த விடயங்களை அலசும் நாவலாகும். துப்பறியும் நாவல்கள் பலவற்றையும் அவர் ஆக்கியுள்ளார். இதற்கென அவர் கணேஷ் - வசந்த் என்ற துப்பறியும் இரட்டையரை உருவாக்கி உலவவிட்டார். தமிழ்வாணண் தனது துப்பறியும் நாவல்களில் தமிழ்வாணண் மற்றும் சங்கர்லால் என்ற இரு துப்பறியும் பாத்திரங்களை உருவாக்கி உலவ விட்டமையைப் பின்பற்றியே சுஜாதாவும் துப்பறியும் இரட்டையர்களை உருவாக்கினர் எனலாம்.

சுஜாதாவின் மிக முக்கிய பங்களிப்பாக அறிவியற் புனைகதைகளைக் கூறலாம். ஜீனோ பாத்திரத்தைப் பயன்படுத்தி அவர் எழுதிய புனைகதைகள் பிரபலமானவை. அத்துடன் என் இனிய இயந்திரா போன்றவையும் குறிப்பிடத்தக்கவை. இவரது என் இனிய இயந்திரா, ஜீனோ கதைகளை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்படவுள்ள படமே இயக்குநர் ஷங்கரின் நெறியாள்கையில் ரஜினி காந்த் நடித்து வெளிவரும் "ரோபோ" ஆகும். இதற்கு முன்னர் 1980 களின் இறுதியில் கமல்ஹாசன் தயாரித்து நடித்து வெளிவந்த 'விக்ரம்' படமும் சுஜாதாவின் திரைக்கதையாகும். ஏவுகணைத் தொழில்நுட்பக் கடத்தலுடன் தொடர்புபட்டதாக இத்திரைப் படம் அமைந்திருந்தது.

### சனரஞ்சக எழுத்தாளர்

அவ்வகையில் தமிழ்த் திரைப்படங்களில் அறிவியல்சார்ந்த [illegible] [illegible]த்துக்குச் சுஜாதாவின் பங்களிப்பை முதன்மையானதாகக் கொள்ளலாம். அந்நியன், போய்ஸ், சிவாஜி, சந்திரமுகி உட்பட பெருமளவு படங்களுக்குச் சுஜாதா வசனம் எழுதியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவரது எழுத்துக்கள் வெளிவராத தமிழக சஞ்சிகைகள், பத்திரிகைகள் அரிது என்னுமளவுக்கு பரவலாக எழுதியுள்ளார். இலகுவான, எளிமையான, வசீகரிக்கும் மொழி நடையை அவர் கையாண்டமையால் சாதாரண வாசகர் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார். எனினும், அவரது கலாபூர்வமான படைப்புகளை இனங்காண்பது சற்றுக் கடினமாகும். இறுதிவரையும் சனரஞ்சகப் படைப்பாளியாகவே அவர் தன்னை இனங்காட்டியுள்ளார்.

### அறிவியல் சார்ந்த கட்டுரைகள்

அவரது அறிவியல் சார்ந்த கட்டுரைகள், கேள்வி-பதில்கள் மிகவும் முக்கியமானவை. ஆனந்த விகடனில் அவர் எழுதிய கேள்வி பதில் "ஏன்? எதற்கு? எப்படி?" என்ற நூலாக வெளியிடப்பட்டு சில தினங்களுக்குள்ளே விற்றுத் தீர்ந்தது. தமிழில் குறுகிய காலத்தில் மிக அதிக பிரதிகள் விற்பனையான நூலாக அதைக் கூறலாம். எளிமையாக, நகைச்சுவையோடு, வாழ்வோடு தொடர்புபடுத்தி வாசகர்களது அறிவியல் சந்தேகங்களுக்குத் தெளிவாக விடையளித்த நூலாக ஏன்? எதற்கு? எப்படி? உள்ளது.

அதுதவிர மனித மூளை பற்றியும் (தலைமைச் செயலகம்), கணணி பற்றியும், செய்மதித் தொடர்பாடல் தொழில்நுட்பம் பற்றியும் பல நூல்களை அவர் ஆக்கியுள்ளார்.

பேனாவுக்குப் பதிலாகக் கணணியைப் பயன்படுத்தி கதைகள் எழுதிய முதலாவது தமிழ்ப் படைப்பாளி அவர்தான் என்று தமிழக இணையத்தளமொன்று கூறுகின்றது. இ-தமிழ் எனப்படும் இலத்திரனியல் தமிழ் உருவாக்கத்தில் சுஜாதா முன்னோடியாகத் திகழ்ந்தார். நவீன தமிழ் அறிவியற் சொற்களின் உருவாக்கத்திலும் சுஜாதாவின் பங்களிப்பு முன்னோடியானதும், முதல்மையானதுமாகும்.

கவிதைகள் பலவற்றையும் எழுதியுள்ள வெண்பா போட்டியினையும் தமிழக இதழ் ஒன்றில் நடத்தியிருந்தார். அவரது கணையாழியின் கடைசிப் பக்கம் பத்தி எழுத்துக்குச் சிறந்த உதாரணமாகும். அவரது பழந்தமிழ் நூற்புலமையை இப்பத்தி எழுத்துத் துலாம் பரப்படுத்தியது.

இந்தியாவில் தேர்தலின்போது பயன்படுத்தப்படும் மின்னணுவாக்குப் பதிவு இயந்திரங்களைத் தொடக்க காலத்தில் வடிவமைத்த விஞ்ஞானிகளில் ஒருவராக அவர் விளங்கினார். அத்துடன் இந்தியாவின் செய்மதித் தொடர்பாடல் தொழில்நுட்ப விரிவாக்கத்திலும், தமிழில் கணணி மென்பொருள் உருவாக்கத்திலும் கூட அவரது பங்களிப்பு இருந்துள்ளது.

எழுந்ததிலிருந்து தூங்குவதுவரை உற்சாகம் இழையோட வாழ்ந்த மனிதராக அவரை எழுத்தாளர் பாலவண்ணண் அடையாளம் காண்கிறார். உற்சாகமும் திறமையும் ஒருங்கே அமைந்த அபூர்வ மனிதராக அவரைக் கூறலாம். தனது இறுதிக் காலத்தில் தினமும் 24 மாத்திரைகளை உட்கொண்டிருந்த போதும் "எப்பவும் உற்சாகமாக இருக்கணும். சார்ஜ் இறங்கவே கூடாது" என்று தன் நண்பர்களிடம் நகைச்சுவையாக - உறுதியோடு- கூறுவாராம்.

தமிழ் வாசகர்களுக்கு பல வாசல்களை-பல சாளரங்களைத் திறந்து வைத்திருந்தார் சுஜாதா. அறிவியல் உண்மைகளையும் நாட்டுப்புறப் பாடல்களையும், சங்க இலக்கியங்களையும், பிரபந்தங்களையும், குழந்தைகளையும், ஆன்மீகத்தையும் நோக்கி வாசகர்களை இழுத்துச் சென்றிருக்கின்றார் என்பதே உண்மையாகும். தமிழ் வாசகனை எல்லாத் திசைகளிலும் பயணிக்க வைத்த, தொடர்ந்தும் புதிய வாயில்களை நோக்கி நகர்த்திய ஒரு பேரியக்கம் திடீரென நின்றதாகச் சுஜாதாவின் மரணம் அமைந்து விட்டது. புதிய அறிவுத் தேடலை எளிமையுடன் சாதாரண வாசகர்களுக்கு ஊக்குவிக்கும் ஒருவரில்லாமல் சுஜாதாவின் மரணம் வெற்றிடத்தை உருவாக்கியுள்ளது எனக் கூறின் அது மிகையல்ல. ✱

**இயல்வாணன்**

# அதிவேகமான தாத்தா



தென்னாபிரிக்காவைச் சேர்ந்த 104 வயதான தாத்தா ஒருவர் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஓடி உலகிலேயே வேகமாக ஓடும் தாத்தா என்ற சாதனையை படைத்திருக்கிறார்.

பிலிப் ரபினோவிட்ஸ் என்ற தாத்தா 100 மீற்றர் தூரத்தை 30.86 விநாடிகளில் கடந்து சாதனை படைத்திருக்கிறார்.

100 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் 100 மீற்றர் தூரத்தை 30 விநாடிகளில் கடந்திருப்பது உலக சாதனையாகும் என்று நாளேடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

# அதிவேக புல்லட் கார்



சுவிற்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த நிறுவனமொன்று உலகில் அதிவேக வாகனம் ஒன்றை உருவாக்கி இருக்கிறது மணிக்கு 340 மைல் வேகத்தில் செல்லக் கூடிய இந்த வாகனம் பார்ப்பதற்கு துப் பபாக்கி ரவை மாதிரியும் இருக்கும்; கார் மாதிரியும் இருக்கும்.

இந்த காருக்கு 'றோட் ஸ்ரீம் லைனர்' என்று பெயர் சூட்டி இருக்கிறார்கள். 3 ஆண்டுகளில் விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படும் இந்த வாகனம் 15 லட்சம் பவுண்ஸாக இருக்கும் என்று அந்த நிறுவனம் கூறியுள்ளது.

# கலக்கும் கரடி



ஜேர்மனியில் விலங்கியல் பூங்காவில் அறிமுகமாகியிருக்கும் பனிக்கரடிக் குட்டி ஒன்று பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்திழுத்துவருகிறது. அந்நாட்டின் நூரம்பர்க் நகரில் உள்ள விலங்கியல் பூங்காவில் கடந்த இரண்டுமாதங்களுக்கு முன்னர் அந்தப் பனிக்கரடிக் குட்டி பிறந்தது.

தற்போது அதற்கு இரண்டு மாதம்ஆகும் நிலையில் அது தாயிடமிருந்து பிரிக்கப்பட்டு விலங்கியல் பூங்காவில் பார்வையாளர்கள் பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த கரடிக்குட்டி [illegible] கவர்ந்திழுத்து வருகிறது. அதன் சாகச விளையாட்டுக்கள் பார்வையாளர்களை வியக்க வைப்பதாகப் பூங்கா நிர்வாகிகள் கூறுகின்றனர்.

# மகாத்மா காந்தி தமிழக முதல்வரானால்



மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாறும் படமாக்கப்படுகிறது. காமராஜரின் வாழ்க்கை வரலாற்றை காமராஜ் என்ற பெயரில் திரைப்படமாகத் தயாரித்து வெளியிட்ட ரமணா திரைப்படத் தயாரிப்பு நிறுவனம்தான் தேசத்தந்தையின் வாழ்க்கையை தழுவி புதிய படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது. இந்த வரலாற்றுப் படத்துக்கு, முதல்வர் மகாத்மா என்று பெயர் சூட்டியுள்ளனர். சுதந்திரத்துக்காக பெரும் பாடுபட்ட மகாத்மா, இந்தியா சுதந்திரமடைந்து 60 ஆண்டுகளுக்கு பின் மீண்டும் வந்தால் இந்த நாடு எவ்வாறு அவரை எதிர்கொள்ளும்? நாட்டின் இன்றைய பிரச்சினைகளை அவர் எவ்வாறு எதிர்கொள்வார்? என்பதைக் காட்டுகிறது இப்படம். தம் வாழ்நாளில் எந்தவொரு அரச பதவியையும் வகிக்காத மகாத்மா காந்தி இந்தியாவின் ஒரு மகாணத்தில் தேர்தலில் போட்டியிட்டு, வென்று முதல்வராவதுதான் முதல்வர் மகாத்மா படத்தின் கதை. அவரால் லஞ்சம் வாங்காமல் ஆட்சி நடத்தமுடியுமா என்பது பெரிய கேள்வி.

# பீற்றூட் சாற்றை அருந்தினால் இரத்த அழுத்தத்தைக் குறைக்கலாம்



பீற்றூட் கிழங்கின்சாற்றை அருந்துவதன் ஊடாக உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கலாம் எனப் பிரித்தானியா ஆராய்ச்சிக் குழுவின் தலைவர் பேராசிரியர் அம்ரிதா அலுவாலியா தெரிவித்துள்ளார்.

அவர் பிரித்தானியாவில் வெளிவரும் 'ரெலிகிராவ்' ஆங்கிலப் பத்திரிகைக்குத் தெரிவிக்கையில்....

பீற்றூட் சாற்றில் 'நைரேட்' சத்து அதிகம் காணப்படுவதால் நாள் ஒன்றுக்கு ஒரு குவளை பீற்றூட்சாற்றைஅருந்தினால் உயர் இரத்தஅழுத்தத்தைக் குறைக்க முடியும் எனக் கூறியுள்ளார்.

கீரையில் அதிகளவு 'நைரேட்' சத்து அதிகம் காணப்படுகின்றது. ஆகவே 'நைரேட்' அதிகம் காணப்படும் மரக்கறிகளைச் சாப்பிடுவதன் ஊடாக உயர் இரத்த அழுத்தத்தை குறைக்க முடியும் எனவும் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

யாழ்.சிவன் பண்ணை வீதியில் சகல வசதிகளுடன் கூடிய மூன்று அறை வீடு வாடகைக்கு உண்டு.
S. கணேசலிங்கம்,
பால்சங்க வீதி, இணுவில் மேற்கு.
T.P.: 077 6470385 (71594)

## மரண அறிவித்தல்

### திருமதி ஹரியட் தம்பிநாயகம்



நவாலியைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஹரியட் தம்பிநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) 27.02.2008 புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற J.V.தம்பிநாயகம் (முன்னாள் அதிபர் றிபேக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் அரியசோதி (மருந்தாளர்), ஏணஸ்ட் (பொறியியலாளர், கொழும்பு) Dr.சாந்தி (அமெரிக்கா), காலஞ்சென்ற தவநாயகம் (இலங்கை வங்கி முன்னாள் உத்தியோகத்தர்), அரியமணி (ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி), காலஞ்சென்ற விமலா (இணுவில் வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் திருமதி றேச்சல் நேசம் இராசையா (முன்னாள் தாதி, இணுவில் வைத்தியசாலை) அவர்களின் அன்புச் சகோதரியும், முருகேசபிள்ளை (மருந்தாளர்), கிருபா (கொழும்பு), ஏபிரகாம் (பொறியியலாளர் -அமெரிக்கா), இந்திரா (ஆசிரியை, யா/விக்ரோறியாக் கல்லூரி) ஆகியோரின் மாமியும் றோகான் (ஜெய்ப்பூர் நிறுவனம்) றோணி ஜிகான் (Y Gro Ltd. கொழும்பு), ஜெனி (சித்த மருத்துவர்), Dr.தாமரி, கிரிஷான் (கொழும்பு), அரவிந்தன், அருந்ததி, ஏரன் (அமெரிக்கா), டினுஷா, சில்வியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 28.02.2008 வியாழக்கிழமை 3.30 மணிக்கு வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது, என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். மரணச்சடங்கில் பங்குபற்றியோருக்கும், உதவி புரிந்தோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*கல்லூரி வீதி,*
*வட்டுக்கோட்டை.*
*T.P. 060 221 6350* (71600)

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## சுற்றாடல் தினத்தையொட்டி சுவரொட்டிப் போட்டி

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே சுவரொட்டி ஆக்கப் போட்டி நடத்தப்படவுள்ளது.

'Co,.Kick the Habit towards a low Carbon Economy' என்னும் தொனிப் பொருளில் நடத்தப்படவுள்ள இப்போட்டியில் தரம் 10இற்கு மேற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் பங்கு பற்றமுடியும்.

ஆக்கங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன் 'பிரதிப் பணிப்பாளர் நாயகம், சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல், இல.104, 'பரிசரபியச', டென்சில் கொப்பேகடுவமாவத்தை, பத்திரமுல்ல' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## சுயதொழில் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இலகுவில் தொழில் வாய்ப்பினைப் பெற தற்காலத்திற் கேற்ற சுய தொழிற் பயிற்சிகள்

- ஸ்கிறீன் பிறின்டிங்
- பொலிமர், இறபர் ஸ்ராம் தயாரித்தல்
- பிளாஸ்ரிக் அடையாள அட்டை தயாரித்தல்
- எங்கிறேவிங், எச்சிங் தொழிற்பயிற்சி
- ஸ்ரிக்கர், பிளாஸ்ரிக், பெயர்ப்பலகைகள் வடிவமைக்கும் பயிற்சி
- சின்னங்கள், கேடயங்கள் தயாரிக்கும் பயிற்சி
- நியோன் பெயர்ப்பலகைகள் வடிவமைக்கும் பயிற்சி
- எம்போசிங் சீல்ட் தயாரிக்கும் பயிற்சி
- ஆபரணப் பெட்டிகள் வடிவமைத்தல்

மேற்படி பயிற்சிகளைப் பெற உங்கள் பதிவிற்கு :

**எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்**
*212, கோயில் வீதி, நல்லூர்.*
222 9607
0777 - 110610

## திருப்பாடுகளின் வரலாறு பசான் ஓதும் நிகழ்வு

நவாலி, மார்ச் 2

மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத்தில் யேசுநாதரின் திருப்பாடுகளின் வரலாறு பசான் ஓதுதல் தினமும் மாலை 6 மணிமுதல் 7 மணிவரை இடம்பெற்று வருகின்றது.

விபூதி தினத்தன்று ஆரம்பமான இப்பசான் எதிர்வரும் பெரிய வெள்ளிவரை 40 நாள்களுக்கு இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## சிவா விளையாட்டுக் கழகம்

16 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும்
6 பேர்,4 பேர் கொண்ட மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி
**(ஓவர் கேம்)**

- போட்டிகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.
- போட்டியில் பங்குபெற விரும்பும் அணிகள் விண்ணப்பப் படிவங்களை கீழ்வரும் முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
- விண்ணப்ப முடிவு திகதி 15.03.2008

(71603)

இராமச்சி அரகு மாடம்
கல்வியங்காடு.
விளம்பர அனுசரணை
**ஜெகன் களஞ்சியம்**
475, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**லிங்கம் உலோகத் தொழிலகம்,**
449, கே.கே.எஸ் வீதி,
(வண்ணை சிவன் கோவிலடிச் சந்தி)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0212222113,0776401033.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.போதனா
வைத்தியசாலை
சத்திரசிகிச்சை
நிலையத்தில்
பொறுப்புத்தாதிய
உத்தியோகத்தராகக்
கடமையாற்றி ஓய்வுபெற்ற
**திருமதி நேசமலர்**
**தேவராஜா**
அவர்கள் 29.02.2008
அன்று கொழும்பில்
காலமான செய்தியை
அறிந்து அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
வைத்திய நிபுணர்கள், தாதிய உத்தியோகத்தர்கள்,
*சத்திரசிகிச்சை நிலையம்,*
*யாழ்.போதனா வைத்தியசாலை.*
F
(71604)

# PC PARK (PVT) LTD.

*the path to computer paradigm*

#633, KKS ROAD, JAFFNA. TP : 021 222 9581
POINTPEDRO ROAD, NELLIYADY, KARAVEDDY. TP : 021 226 4828
WWW.PCPARK.LK INFO@PCPARK.LK

*Always with you*

**Processor**
- 3.0GHz (2MB) Intel Pentium Processor - 8000.00
- 3.0GHZ (4MB) Intel Pentium Processor - 11500.00
- 1.8GHZ Intel Pentium Dual Core Processor - 9200.00

**Mother Board**
- Asus P5GC MX Motherboard - 7400.00
- Foxconn Motherboard - 6400.00
- Intel 945 GCNL Motherboard - 8600.00
- MSI Motherboard - 6000.00
- 478 Biostar Motherboard - 6800.00

**Memory**
- 1GB DDR-2 Kingston Ram - 2750.00
- 512MB DDR-2 Kingston Ram - 1600.00
- 512MB DDR-1 Kingston Ram - 3500.00

**Else**
- M.Media Keyboard - 500.00
- Optical Mouse - 500.00
- Normal Mouse - 300.00
- Speaker - 600.00
- 5.1 Creative Woofer - 8250.00
- Scanner - 6500.00
- ATX Casing with genuine power supply - 4700.00
- LQ 300 Printer ribbon - 500.00
- TV Card MSI - 4500.00
- HP LaserJet torners
- Canon Cartridges

**Printer**
- HP Inkjet Printer D1460 - 6000.00
- HP LaserJet Printer 1005 - 15000.00
- Dot matrix Printer EPSON LQ300+ - 21000.00

**Hard disk**
- 80GB SATA Hard disk - 5450.00
- 80GB IDE Hard disk - 5750.00


**UPS**
- Power Tree UPS 650W - 5800.00
- Mercury UPS 650W - 6000.00

**Optical Drive**
- DVD Writer Samsung SATA - 4300.00
- DVD Writer Samsung IDE - 4200.00
- DVD Writer Asus Light Scribe - 4500.00
- Combo Drive Samsung - 3200.00
- DVD Rom Samsung - 3000.00

**Monitor**
- 17"CRT Samsung Monitor - 13000.00
- 15"LCD View sonic Monitor - 21000.00
- 17"LCD Wide Screen Viewsonic Monitor - 24000.00
- 17"LCD LG Monitor - 23000.00

**Flash**
- 1GB Kingston - 900.00
- 2GB Kingston - 1600.00
- 4GB Kingston - 2700.00

**HP PAVILION G3215L BRANDED SYSTEM**



*3.0 Dual core processor*
*512MB DDR2 SDRAM*
*80 GB SATA 7200 rpm*
*Combo Drive*
*56K bps data/fax modem*
*Integrated graphics*
*AC97 sound*
*Inbuilt 9 - 1 Card reader*
*17" C R T*

**63,000.00**
**Warranty 3 1year**

**PC PARK ASSEMBLED SYSTEM**



*Dual core 1.8 GHz processor*
*Intel 945 Chipset motherboard*
*1 Gb DDR2 SDRAM*
*80 GB SATA 7200 rpm*
*Combo Drive*
*Integrated graphics*
*ATX casing*
*17" C R T*
*UPS*

**54,000.00**
**Warranty 3 3years**

*Upto 3 years warranty for the listed products.*

*Claim your warranty anywhere in Sri Lanka in our showrooms.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மாணவ மனவுலகை வளப்படுத்துவோம்!

சமூகம் இன்று வேண்டாத பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றை வெளிப்படையாக எடுத்து விளக்கியிருக்கிறார் யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா.

*''மாணவர்கள் நமது சமுதாயத்தில் நிறைவான மனிதர்களாக உருவாக வேண்டும் என்பதே கல்வியின் பிரதான நோக்கங்களில் ஒன்று. அதற்கு ஆதாரமாக விளங்குபவை குருபக்தியும் ஆன்மீக நாட்டமுமாகும்.*

*''சுமார் அறுபது வருடங்களுக்கு முன்னர் கல்வி, ஆன்மீகத்துடன் இணைந்திருந்ததால் சமூகம் சிறப்படைந்திருந்தது. இன்று ஆன்மீக நாட்டத்துக்கான கல்விமுறை மாறிவிட்டதால் வேண்டாத பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது''* - இப்படி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கருத்து வெளியிட்டிருக்கின்றார் யாழ்.மாவட்ட நீதிபதி.

'ஆன்மீக நாட்டமும், குருபக்தியும்' என மாவட்ட நீதிபதி இங்கு சுட்டிக்காட்டுபவை வெளிப்படையாகச் செய்யப்படும் கருமங்கள் அல்லது இயற்றப்படும் காரியங்கள் அல்ல. சமூக விழுமியங்களை இளம் சமூகத்துக்கு உணர்த்தி மனம், வாக்கு, காயத்தால் மாணவர்களை நல்வழிப்படுத்தும் பழைய கல்வித் தந்திரோபாயம் பற்றியே அவர் பேசுகின்றார்.

மாணவனின் மன அகவுலகின் சூறாவளிகளையும், சுழி நீரோட்டங்களையும் பற்றிச் சிந்திக்க மறந்த நவீன கல்விச் சிந்தனை 'நட்பார்ந்த கல்வி முறை' (Friendly Eduction) என்ற பகட்டுத் தோற்றத்துடன், மாணவனின் புறவுலகத் தொடர்பாடல்களை மட்டும் நெறிப்படுத்துவதுடன் அவனை நெருங்கிவிட்டதாக எண்ணி மகிழ்கின்றது.

காலங்காலமாக, எண்ணத்தால் - சிந்தனையால் - அறிவால் -அனுபவத்தால் - வாழ்வியல் தரிசனங்களில் நம் முன்னோர்கள் பெருக்கிக் கொண்ட கல்வியியல் கருத்துருவச் சித்திரங்கள் எல்லாம் வெறும் பழைய, இறந்தகால மனவுலக மானசீகக் கற்பனைகள், அர்த்த மற்ற நம்பிக்கைகளின் மனப் படிமங்கள் என்று கூறிப் புறம் ஒதுக்கிய புதிய கல்வியியல் நடைமுறைப் போக்கின் விளைவுகளை நமது சமூகம் இன்று எதிர்கொண்டு அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

பொருளியல் வாழ்விற்கும் பொருண்மிய உறவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நவீன உலகம், சமூக உறவுகளின் சமரசத்துக்கு அடிப்படையான கல்வி மார்க்கம் பற்றிச் சிந்திக்கத் தவறிவிட்டது. அதையே மாவட்ட நீதிபதி தெளிவாக நமக்குச் சுட்டிக் காட்டுகின்றார்.

*''கல்லூரியின் முதன்மை நோக்கம் கல்வியின் மூலம் ஒழுக்கமும் பண்பும் மிக்க ஓர் உயரிய சமுதாயத்தை உருவாக்குவதுதான். தோற்றத்தில் சீர்மை, செய்யும் தொழிலில் அர்ப்பணிப்பு, வருகையில் ஒழுங்கும் நேரத்தில் ஒழுங்கும், வலுவிழந்தோர் மீது இரக்கம், மூத்தோரையும் கற்றோரையும் மதித்துப் பேணும் பணிவுடமை, உண்மை - நீதி, நியாயம் - ஒழுக்கம் போன்றவற்றையும் கடைப்பிடித்தல், நீதியை நிலைநாட்டுவதில் பக்கச்சார்பின்றி நடத்தல், தயாளகுணம் ஆகியன ஒரு பிள்ளை பாடசாலை நாள்களில் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய பண்புகளாகும்.''*- என்று மாவட்ட நீதிபதி நமக்கு நினைவுபடுத்துகின்றார்.

மாணவர்களின் மனவுலக ஆய்வின் பெறுபேறாகப் பெறப்பட்டதாகக் கூறப்படும் 'நட்பார்ந்த கல்வி முறை' என்ற நமது நவீன கல்விச் செயற்பாடுகள் அல்லது 'கற்றல் - கற்பித்தல் படிமுறை' சமூகத்தின் மேற்படி விழுமியங்களையும் பேணி நிலை நிறுத்துவது குறித்துக் கருத்தில் எடுத்துள்ளதா என்ற கேள்வி இன்றைய கட்டத்தில் எழுவது நியாயமானதுதான்.

நவீன கணனி யுகத்துக்குள் புகுந்து, புதைந்து கொண்டுவிட்டது உலகம். சமூகக் கட்டமைப்புக்கு ஏற்ப நேரிய - சீரிய - முறையில் வனையப்பட வேண்டிய மாணவ மனவுலகையும் கணனியின் மூளை போலக் கருதி நிகழ்ச்சி ஒழுங்குபடுத்தலை அதில் மேற்கொள்ள எத்தனிக்கின்றனர் கல்வியியலாளர்கள்.

மாணவனின் மனதை செம்மைப்படுத்தும் மனவுலக நெறிப்படுத்தல் விவகாரங்களையும் உள்வாங்கிய கல்வி முறைமையே இன்று அவசியமாகின்றது.

இற்றைக்கு அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் நமது கல்வி முறைமையில் இருந்து, பின்னர் இப்போது அருகி, அதன் காரணமாக இன்றைய சீரழிவு நிலைக்கு வித்திட்ட காரணிகள் என்று மாவட்ட நீதிபதி நமக்கு எடுத்துரைக்க முயல்வது இதைத்தான்.

பழைய கல்வி முறைக்குள் புதைந்து கிடக்கும் அந்த நற்பண்புகளை மீண்டும் மாணவ உலகுக்கு அறிமுகப்படுத்தும் முயற்சிகள் விரைந்து முன்னெடுக்கப்படவேண்டும்.

## வடமராட்சியில் கல்வியில் சாதனை படைத்த மாணவர்களை மக்கள் வங்கி கௌரவிக்கிறது

கரவெட்டி,மார்ச்2

மக்கள் வங்கியின் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி ஆகிய கிளைகள் இணைந்து வடமராட்சியில கல்வியில் சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிக்கவுள்ளது.

இக்கௌரவிப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 9ஆம் திகதி காலை 9 மணிக்கு பருத்தித்துறை சிவன் கோயில் பர்வதவர்தனி கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 3ஏ பெற்ற 23 மாணவர்களையும் 2006ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெற்று தேசிய, மாவட்ட மட்டங்களில் மக்கள் வங்கியின் புலமைப் பரிசில்களைப் பெற்ற மாணவர்களே கௌரவிக்கப்படவுள்ளனர்.

பருத்தித்துறைக் கிளைமுகாமையாளர் மு.சிவனேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராஜா, மக்கள் வங்கியின் வட வலய உதவிப்பொதுமுகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா ஆகியோர் கலந்துகொள்வர்.

(202-70)

## தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் கணனிச் சேவைகள்

யாழ்ப்பாணம்,மார்ச்2

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளை நடவடிக்கைகள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன.

நாளை திங்கட்கிழமை தொடக்கம் கிளை அனைத்துச் செயற்பாடுகளும் கணனிமூலம் மேற்கொள்ளப்படும் என வங்கிக்கிளையினர் தெரிவித்தனர். (202-207)

## இனந்தெரியாதோர் தாக்கி இளம் குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்2

இளம் குடும்பஸ்தர் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த செல்வரத்தினம் விமலதாசன் (வயது26) என்பவரே காயமடைந்தவராவார். தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (202-207)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்2

தென்மராட்சிப் பிரதேசத்தில் அமுல்படுத்தப்படும் உயிரியல் வள வீட்டுத் தோட்டத்திட்டத்தின் வயல் விழா நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை காலை9.30 மணிக்கு கச்சாய் அம்மன் கோயிலடியில் நடைபெறவுள்ளது.

அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் வி.சக்திவேல் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும், சிறப்பு விருந்தினராகப் புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவன யாழ்.மாவட்ட பொறுப்பதிகாரி எச்.ஏ.அருள்ஞானமும் கலந்துகொள்வர்.

புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனமும் (IOM) அறவழிப் போராட்டக் குழுவினரும் பிரதேசத்தின் இராமாவில் கச்சாய் ஆகிய கிராமங்களில் இத்திட்டத்தினை அமுல்படுத்தி வருகின்றனர்.

இவ்விழாத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள 50 பயனாளிகளின் பங்களிப்புடன் உற்பத்தி செய்யப்பட்ட பயிர் வகையைப் பார்வையிடலாம். (202-207)

* * *

யாழ்ப்பாணம், மார்ச்2

சாவகச்சேரி மண்டுவில் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தினவிழா இன்று காலை 9 மணிக்கு சங்க மண்டபத்தில் திருமதி சிவானந்தம் இராசாத்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவுக்கு முதன்மை விருந்தினர்களாக மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம், உதவி முகாமையாளர் திருமதி ஈ.ஜீவகதாஸ் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சி பிரதேச செயலகக் கிராம அபிவிருத்தி அலுவலர் செ.உமாபாலன், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக நிலைய அலுவலர் திருமதி ஜெ.செல்வராணி ஆகியோரும் கலந்து கொள்வர். (202-207)

## காரைநகரில் காலபோக நெற்செய்கை இம்முறை அமோக விளைச்சலைத் தந்துள்ளது

### பிரதேச விவசாயிகள் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம்,மார்ச்2

காரைநகரில் இவ்வாண்டு காலபோக நெற்செய்கை அமோக விளைச்சலைத் தந்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

தற்போது விவசாயிகள் அருவி வெட்டி சூடு அடிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் சிறுதானியச் செய்கைக்குரிய ஈரலிப்புக் காணப்படுவதால் நூற்றுக்கணக்கான விவசாயிகள் எள், பயறு, உழுந்து, குரக்கன் போன்ற சிறு தானியங்களை விதைப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எனினும் கால்நடைகள் விவசாய நிலங்களுக்குள் புகுந்து பயிரினை அழித்து வருவதாகக் கவலை தெரிவிக்கும் விவசாயிகள் அவற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைநகரில் மக்கள் மீளக் குடியேறிய பின் சிறுதானியச் செய்கையில் அதிகளவானோர் ஈடுபட்டிருப்பது இதுவே முதற்தடவை எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது. இவ்வாண்டு காரைநகரில் சுமார் ஆயிரத்து இருநூறு ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (202-250)

## புலிகளின் 'விடுதலை மூச்சு' திரைப்படத்தை தடைசெய்ய வெளிநாடுகளிடம் கோரிக்கை

கொழும்பு,மார்ச்2

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, தமது பிரசார நடவடிக்கைகளை சர்வதேச ரீதியில் விரிவுபடுத்துவதற்காக 'விடுதலை மூச்சு' என்ற திரைப்படத்தை தயாரித்திருக்கிறது என்று குற்றம்சாட்டியிருக்கும் இலங்கை அரசு, அந்தப் படத்தை தடைசெய்யுமாறு வெளிநாடுகளிடம் கோரியிருக்கிறது.

குறிப்பாக நோர்வே,டென்மார்க், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சு நேற்றுமுன்தினம் தெரிவித்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தமது நாட்டில் ஒரு தடை செய்யப்படாத அமைப்பு என்பதால் கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்கும் வகையில் குறித்த திரைப்படத்திற்கு தடை விதிக்கமுடியாது என்று நோர்வே அரசு இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ஜேர்மனிய அரசு அந்த நாட்டின் பிரதான ஐந்து திரையரங்களில் குறிப்பிட்ட திரைப்படத்தை வெளியிடுவதற்கு தடைவிதித்திருக்கின்றது என்றும் ஒரு செய்தி தெரிவித்தது. (சி)

## மேஜர் ஜெனரல் பன்னிப்பிட்டியவின் பாதுகாப்பைக் குறைப்பதற்குத் தடை!

### உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு

கொழும்பு,மார்ச்2

விடுதலைப் புலிகளிடமிருந்து தொப்பிகல காடு உட்பட கிழக்குப் மாகாணப் பிரதேசங்களை விடுவிக்கும் படைநடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த முன்னாள் கிழக்கு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டியவை அவரது தற்போதைய உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேற்றவும், அவரது பாதுகாப்பைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கக்கூடாது என இடைக்காலத் தடை விதித்து உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்தது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, ஜக்த் பாலபட்டபெந்தி ஆகியோர் கொண்ட ஆயமே நேற்றுமுன்தினம் இந்த உத்தரவை விடுத்தது.

கொழும்பு, சமிட் பிளேஸில் உள்ள தமது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறவும், தனக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை விலக்கியும், தன்னை கிழக்கு மாகாண இராணுவத் தளபதி பதிவியிலிருந்து இடமாற்றியும் இராணுவத் தளபதி விடுத்த உத்தரவுகளை ஆட்சேபித்து மேஜர் ஜெனரல் பன்னிப்பிட்டிய உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்றுமுன்தினம் மீண்டும் நாடாளுமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அந்த மனுவைத் தொடர்ந்து விசாரணைக்கு ஏற்பது என நீதிமன்றம் முடிவுசெய்தது.

இந்த மனு மீதான விசாரணை முடியும் வரை மனுதாரரை அவர் தற்போதுள்ள சமிட் பிளேஸ் இல்லத்திலிருந்து வெளியேற்றக் கூடாது என்றும் -

அவருக்கு வழங்கப்பட்ட உரித்தான பாதுகாப்பு ஆட்களும், அவர்களுக்கான வாகனங்களும் குறைக்கப்படக்கூடாது என்றும் -

நீதியரசர்கள் நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்தனர்.

எனினும், கிழக்கு மாகாணத் தளபதி பதவியிலிருந்து கொழும்பு இராணுவத் தலைமையகத்துக்கு இடம் மாற்றி தமக்கு வழங்கப்பட்ட உத்தரவை இடைநிறுத்துமாறு கோரி மனுதாரர் சமர்ப்பித்த வேண்டுகோளை உயர் நீதிமன்றம் ஏற்கவில்லை. அதையொட்டி இடைக்காலத் தடை உத்தரவு விதிக்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

நேற்றுமுன்தினம் இந்த மனு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அரசுத் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டத்தரணி நெரின் புள்ளே, மனுதாரர் கிழக்கு மாகாணத் தளபதியாக இருந்த சமயம் இடம்பெற்றதாகக் கூறப்படும் சுமார் 25 லட்சம் ரூபா ஊழல் தொடர்பாக மனுதாரருக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.(சி)

## நாளை

| | |
|---|---|
| மாசி - 20 | 03.03.2008 திங்கட்கிழமை |
| திதி : ஏகாதசி | பி.இ. 12.28 வரை |
| நட்சத்திரம் : | பூராடம் |
| | பி.ப. 02.59 வரை |
| சுபநேரம் : | 12.26 - 01.56 |
| ராகுகாலம் : | 07.56 - 09.26 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவின் உலக உணவுத் திட்டத்திடம் போதிய நிதியில்லை; வடக்கு, கிழக்கில் நிவாரணப் பணிகளை மீள வகுக்க அறிவுறுத்து

கொழும்பு,மார்ச்2

உலக உணவுத் திட்டத்தின்(WFP) ஊடாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளை மீள வகுக்குமாறு அரச அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

உலக உணவுத் திட்டத்தின் இலங்கைப் பிரதிநிதி முகமட் உவிசீன் இந்த அறிவுறுத்தலை வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அரச அதிபர்களுக்கு விடுத்துள்ளார்.

அந்த நிறுவனம் இந்த ஆண்டு மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் குறித்து ஆராய்வதற்கான செயலமர்வு ஒன்று கடந்த இரு தினங்கள் கொழும்பில் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது.

எமது நிறுவனத்துக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்கு 72 மில்லியன் ரூபா தேவையாக உள்ளது. ஆனால் எம்மிடம் இந்தப் பணிகளுக்கு 28 பில்லியன் ரூபா மட்டுமே கைசவசம் உள்ளது. மேலும் 44 மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது.

குறிப்பிட்ட நிதியை வழங்குமாறு சர்வதேச அமைப்புகளிடம் கோரியுள்ளோம். அந்த நிதி எமக்கு முழுமையாகக் கிடைத்தால் மட்டுமே ஏற்கனவே உத்தேசிக்கப்பட்டவாறு உதவிகளைச் செய்யமுடியும் -

இல்லையேல் நிவாரணப் பணிகளைக் குறைப்பது தொடர்பாக பரிசீலனை செய்ய நேரிடும். எனவே மாவட்ட அரச அதிபர்கள் அதற்குத் தக்கவகையில் தமது மாவட்டங்களின் நிவாரண மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை குறைக்க தயராக இருக்கவேண்டும். பணிகளை முன்னுரிமை அடிப்படையாக வகுத்துத் திட்டமிட வேண்டும் - என்று முகமட் உவீசின் அறிவுறுத்தினார்.

நிதிக்குறைப்புக்கு ஏற்ப திட்டங்களை மீள வகுத்து விரைவில் சமர்ப்பிக்குமாறும் அவர் அரச அதிபர்களிடம் கேட்டுக் கொண்டார். (அ-1)

## வண்ணை வைத்தீஸ்வரர் பெருந்திருவிழா நாளை ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம்,மார்ச்2

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

நாளை காலை 9 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி கொடியேற்றம் நடைபெறும்.

பெருந்திருவிழாவில் 18ஆம் நாளான இம்மாதம் 20ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (அ-1)

## விடுதலைப் புலிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அமைப்புக்கு வழங்கும் ஆதரவை மீளப் பெறுங்கள் -

இலங்கையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகள் யாவும் பூர்த்தி செய்யப்படும் -

இலங்கை அரசுக்கு எதிராக விடுதலைப் புலிகள் சார்பு அமைப்புக்கள் மேற்கொள்ளும் பிரசாரங்கள் அர்த்தமற்றவை. தேவையற்ற வகையில் மேற்கொள்ளும் அந்தப் பிரசாரங்களை சர்வதேசம் கவனத்தில் எடுக்கக்கூடாது.

விடுதலைப் புலிகளுடனான தொடர்பு களை உடன் நிறுத்தி இலங்கை அரசு மேற்கொள்ளும் அரசியல் தீர்வுச் செயற்பாடுகளுக்கு ஆதரவு தரவேண்டும் என்று அக்குழு கோரிக்கை விடுத்தது.

சின்பெயின் அமைப்பின் தலைவர் ஜெரி அடம்ஸ் கடந்த டிசெம்பர் மாதம் கிளி நொச்சிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-1)

## சட்டத்தரணி தங்கராசா காலமானார்

வடமராட்சி,மார்ச்2

சமூக சேவையாளரும் சட்டத்தரணியும் பதில் நீதிவானுமாகிய நடராஜா தங்கராசா நேற்று அதிகாலை காலமானார்.

பருத்தித்துறை நீதிமன்றம் உட்பட குடாநாட்டு நீதிமன்றங்களில் சட்டத்தரணியாகக் கடமையாற்றிய இவர், பருத்தித்துறை பதில் நீதிவானாகவும் பணியாற்றி வந்தார்.

புலோலி ப.நோ.கூ. சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் அடுத்த ஆண்டுக்கான தலைமைப் பதவியை ஏற்கவிருந்தவர். இறக்கும்போது இவருக்கு வயது 61.

அவரது இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பணிபுரியும் நீதிபதிகள், சட்டத்தரணிகள் பலரும் மற்றும் லயன்ஸ் கழக உறுப்பினர்களும் அவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (அ-160)

## இராணுவ நகர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலைமைகளின் கீழ் அரசாங்கம் காத்திரமான அரசியல் தீர்வொன்றை நோக்கிச் செல்லும் என்பதில் எனக்கு துளியும் நம்பிக்கை இல்லை.

தனது இராணுவ முன்னநகர்வுகளை நியாயப்படுத்தும் ஒரு தற்காலிக முயற்சியாக அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளை நாம் நோக்குகின்றோம்.

அனைத்துலக சமூகத்தை அமைதிப்படுத்துவதற்கான கண் துடைப்பே இந்த நடவடிக்கைகள்.

கிழக்குத் தேர்தல் குறித்து அவர் கூறியதாவது :-

முஸ்லிம் பகுதிகளில் குறிப்பிட்ட அமைச்சரினால் ஏற்படும் குழப்பங்களைத் தவிர வேறு பிரச்சினைகள் இல்லை.

எங்களால் சமாளிக்கக்கூடிய நிலை யிலேயே உள்ளது. சட்டம், ஒழுங்கு என்ற பொறிமுறை நியாயமானதாக இருப்பதனையே நாம் விரும்புகின்றோம்.

சில பொலிஸ் அதிகாரிகளின் செயற்பாடுகள் சட்டத்திற்குப் புறம்பான வகை யில் அமைந்துள்ளன.

தமிழ்ப் பிரதேசங்களின் இந்த நிலைமை மிகவும் மோசமாகவே அமைந்துள்ளது. குறுகிய காலத்தில் சுமுக நிலைமை என்பது சற்று சாத்தியமில்லாத விடயமாகவே தோன்றுகிறது.

தேர்தல் ஒன்றை நடத்துவதன் மூலம் பிரதேசத்தில் சுமுக நிலை திரும்பியுள்ள தாக வெளிக்காட்ட அரசாங்கம் எண்ணினால் அதுவொரு மாயையாகக் கருதுகிறேன்.

### தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிப்பது

நிர்க்கதியான தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதில் குழம்பிப்போயுள் ளனர்.

மட்டக்களப்பு மாநகர சபைத் தேர்தல் களுக்காக அரசாங்கம் வெட்கமின்றி பல தமிழ் ஆயுதக் குழுக்களைத் தமது பட்டி யலில் இணைத்துக் கொண்டுள்ளது.

அப்பகுதி மக்கள் அடைந்திருக்கும் ஏமாற்றத்தினை எங்களால் உணரக் கூடிய தாக உள்ளது.

சட்டம், ஒழுங்கு சீர்குலைவதற்கான அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. மக்களின் அதிருப்தி காரணமாக அதிக எண்ணிக்கையிலான வாக்குகள் நிராகரிக்கப்படக்கூடிய அபாயம் நிலவுகிறது.

இந்தத் தேர்தல்களில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் போட்டியிடாவிட்டால் தேர்தல்கள் ஓர் அர்த்தமற்ற நடவடிக்கையாக அமையக்கூடிய வாய்ப்பு அதிகமாகக் காணப்படுகிறது. - என்றார். (அ)

## கிழக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேறு சில அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைத்துப் போட்டி யிட முடிவுசெய்துள்ளது. ஐக் கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் வேறு சில அரசியல் கட்சிகளுடன் இணைந்து கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக நெடுஞ் சாலைகள் மற் றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பன கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இதுவரையில் எந்த முடிவையும் மேற்கொள்ளவில்லையெனத் தெரியவந்துள்ளது. (அ-3)

## அம்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறிவெடிகளில் சிக்கினர். இச்சம் பவத்தில் மேலும் மூன்று படையினர் காய மடைந்தனர்.

இதேவேளை -

மன்னார் கோயில்மோட்டையில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளின் பொறி வெடிகளில் சிக்கி படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் இருவர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (அ-2)

## 41.7 பில்லியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோட்டுக்களை அச்சடித்துப் புழக்கத்தில் விடுவதெனத் தீர்மனித்திருந்த போதிலும், 24.6 பில்லியன் ரூபா பெறுமதியான நோட்டுக்களையே அச்சிட்டுப் புழக்கத்தில் விட்டிருந்தது.

இப்போது, இந்த ஆண்டின் முதல் மூன்று மாத காலத்திற்கு மட்டும் 16.9 பில்லியன் ரூபா பெறுமதியான புதிய பணநோட்டுக்களை அச்சிட்டுப் புழக்கத்தில் விடுவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. (அ-3)

## பண்டிவிரிச்சானில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றரை மணி நேரம் தொடர்ந்ததாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

பண்டிவிரிச்சான் மோதலில் 11 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் பலர் காயமடைந்தனர் என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை -

வடக்கில் நேற்று நடைபெற்ற புதிய மோதல் ஒன்றில் 45 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் 11 படையினர் காயமடைந்தனர் என்றும் ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (அ-1)

Mega Offer
Dish TV, Tata sky
Dish TV, Tata sky Activation
Cable TV Technical Advice
Cable TV Spare Parts
Sun TV, KTV Card Activation
RG -11, RG - 6 Gel Cables
dish TV Rs.12000
PC SYSTEMS
Total IT Solution Providers
ஆலடிச் சந்தி, யாழ் வீதி, மானிப்பாய்.

துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

சிறந்த கல்வி உயர்ந்த பெறுபேறு
கணக்கீடு:P.பகீரதன்
A/L 2008 புதிய அலகுகள்
வருமான செலவு க/கு
Wed., Thu. 6.15-7.15am
ஆரம்பம்:
4/3 காலை 6.15
காசுப்பாய்ச்சக் கூற்று
Mon., Fri. 5.15-6.15p.m
ஆரம்பம்:
3/3 Mon. 5.15 p.m
IBS

CHEMISTRY
மின் இரசாயனம்
Bat.- I-Mon,Wed 1.00p.m
Bat.- II -Wed 4.30p.m
ஆரம்பம்:
03.03.2008
Mon 1.00 p.m
BY: S.VASU
NAVALAR

இது புதிய பிரிவுகள் ஆரம்பம்!!
CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
02-03-08 (Sun) 03-03-08 (Mon)
*Internet & E-Mail * Visual Basic Programing
* Computer Hardware * ICT [Grade 10 & 11]
* Computerized Accounting

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா மகாலிங்கம்

புதுறோட், காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல. 148, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகாலிங்கம் நேற்று (01.03.2008) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க.ராசகுமாரன்
(மருமகன் - நூபா பன்முக வர்த்தக நிலையம்)

*இல. 148, கன்னாதிட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (a)

### திருமதி பிள்ளையம்மா நல்லையா

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிள்ளையம்மா நல்லையா நேற்று(01.03.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு நல்லையாவின் மனைவியும் அமுதலிங்கம்(அதிபர், அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயம்), ரகுநாதன்(நீபன் ஸ்ரோஸ், கல்வியங்காடு), சற்குணநாதன்(சுவிற்ஸர்லாந்து), ஜெகநாதன்(மாநகர சபை, யாழ்ப்பாணம்), சிவநாதன்(ஜேர்மனி), ஜெயந்தி(ஆசிரியை, கோண்டாவில் இந்து ம.வி), அருள்நாதன்(பிரான்ஸ்) ஆகியோர் அன்புத் தாயாரும் தரும லிங்கம், மாணிக்கவாசகர், காலஞ்சென்றவர்களான கனகம்மா, நல்லையா, பாலசுந்தரம் மற்றும் கனகசபாபதி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற தருமசோதி மற்றும் சிவோதயன், ராதா, கமலேஸ்வரி, செல்வகுமாரி, நளாயினி ஆகியோரின் மாமியாரும் திலீபன், அமிதாயன், கரிதாயன், விபூஷன், விதுஷன், அனுஷா, ராமாவரன், பவித்திரா, கஜதரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.03.2008) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப. 2 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல 90, அம்பாள் வீதி,*
*நாயன்மார்கட்டு.* (a)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org